[illegible]

13 No.16 17 April 1930

உ

3L
[illegible]211, N28 K.N
N 30.3.16.
189100.

KALANILAYAM. தனிப்பிரதி ரூ. 0 3 0

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 3.] 1930 ஸு ஏப்ரல் மீ 17உ [No. 16.

22 MAY 1930

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader). 301
2. அப்பர் (யுத்தக்கலை)
E.N. தணிகாசலமுதலியார் B.A., B. L. 303
3. தமிழ்ப்பாடம் (கிருஷ்ணன் தூது) 304
4. மானத சாத்திரம் (நடத்தை)
T. P. மீனாக்ஷிசுந்தரன் M.A., B.L. 307
5. குறுந்தொகை (பாட்டு 22—31)
K. இராமரத்நம் ஐயர் B. A. 308
6 நம்மாழ்வார் வைபவம் (1 பத்து—3 பதிகம்)
K. இராஜகோபாலாசாரியார் B.A.B.L. 311
7. இலஞ்சிப் பாவை (காதலியம்பல்)
T. S. நடராஜபிள்ளை. B A., B.L 313
8 ஆச்சரிய சூடாமணி (அசோகவன அங்கம்)
R. முத்தையர் 315
9 கம்பராமாயணம் (மந்திரப் படலம்)
T. N. சேஷாசலம் B. A., B. L. 316
10. வர்த்தமானம் 319

கலாநிலயம்

முயலுக்கு முயல வேண்டா.

"சாமர்த்தியசாலிகள் சாதித்ததெல்லாம் போதும்,
இனிச் சாதுக்களே வேண்டும் வேண்டும்"

என்னுமிப் பாடத்தையே உலகினி லிந்நாள்நிகழ்கின்ற செய்திகளெல்லாம் உறவுற ஓதிவருகின்றனவாயினும் அதனிற்குச் செவிகொடுப்பாரைக் காணுக்குறையினால் கரைந்து நைகின்றார் மெய்யுணர்வுடைய மேன்மையோர் ஒரு சிலர். எல்லாரு மெங்கு மின்புற்றிருப்பதுவே யன்றி வேறொன்றும் வேண்டாப் புண்ணிய புருடர்களனைவரும் சாதுக்களா யிருந்தவர்களே யல்லாமல், இம்மண்ணுலகம் எண்ணிமதிக்கும் முறையில் சாமர்த்தியசாலிகள் எனத் தகுந்தவர்க ளல்லர். மானுடத் தன்மையிலும் அவரவர் அனுபவிக்கும் சுக துக்கங்களிலும், எங்கெங்கும் எந்நாட்டினரும் யாவரும் ஓரளவினராகவே யமைகின்றனர் என்னுமிது உண்மையானாலும், தற்காலம் மேனாட்டினர்களும் அவர்களைக்கண்டு எதிர்நடிக்கும் ஜபான் முதலிய தேயத்தினர்களும் பலதுறைகளில் முயன்றுவரும் முயற்சிகளை இங்குநின்று நோக்கிநோக்கி நெட்டுயிர்த்து அங்காந்தபடி ஆரவாரம் செய்வாரெலாம், தமக்கும் பிறர்க்கும் நன்மைகளைச் சாமர்த்தியத்தால் சாதித்துக்கொள்ளலாமெனும் மூடபக்தியில் மூழ்கித் தவிப்பவர்களே யாகின்றார். பொய்வளர்க்கும் ஊக்கமே அவ்வை என்பதிற் சிறிதேனும் சந்தேகம் உளதேல் இகத்திற்கேனும் பரத்திற்கேனும் அதனால் சாதித்த தின்னவென்று விரல்விட்டுப் பார்க்கலாமே. ஆகாயக் கப்பலையும், கம்பியில்லாத் தந்தியையும், பஞ்சாலைகளையும் பார்லிமெண்டையுங் காட்டிக்காட்டிச் சூளுரைப்பதெல்லாம் பிள்ளைமதியின் பேதைமை. கழைக்கூத் தாடக்கண்ட குழந்தையொன்று தானும் அது செய்ய விழைவதே யொக்கு மிது.

உயரவுயரப் பறந்து சிலர் விண்ணிலே உயர்கின்றனர். பாதலம்வரைப் பிலங்கள் தோண்டித்தோண்டி அகழ்கின்றனர் சிலர். அகழ்ந்து கொணர்ந்த பொருள்களை விற்றுமுதலாக்குதற்குப் பற்பல முறைகளையுந் தொழில்களையும் நிறுவுகின்றனர். இவைகளால் அவர் கண்ட பயன் யாதெனவெண்ணி யிங்குளோர் பொறுமையால் கருத்தழிந்து மாழ்குகின்றனரோ அறிகிலேம். அன்னமாய் உயர்ந்தும் ஏனமாய் அகழ்ந்தும், அன்பின் உருவாய வத் தனிப்பெருஞ் சோதியின் அடிமுடி காணக்கிடைத்ததோ! அஃதில்லையேல் இவ் வல்லலெல்லாம் மற் றெற்றுக்கு! திருவருளின்பால் நம்மைக் கொண்டுசேர்க்காத தொழில்களால் அழிவன்றிப் பிரிதுமுண்டோ. மறுமைக்கன்றோ அருள் வேண்டுவது, இம்மைக்கிம்முயற்சிகள் வேண்டாவோ, என்பதிலும் வாய்மையில்லை. இம்மையிற்றான் அங்குளோர் என் பெற்றார். பட்டுச் சட்டைக்குள் புழுங்கும் நெஞ்ச மெத்தனையோ! மேன்மாட வீடுகளில் புகைந்தழுங்கும் மனங்கள் எத்தனையோ. கொலையும் களவும் வஞ்சனையும் அவ்வியமும் தெருத்தெருவாய் விரைந்துதிரிகின்ற வொருநாட்டில் சாமர்த்தியசாலிகளெல்லாஞ் சேர்ந்து சாதித்த பரிபவம் சொற்கடந்து நிற்கவில்லையா. இதனால், நல்லவர் சிலர் அங்

கிலர் என்று நாம் தூற்றவில்லை. சாமர்த்தியசாலிகளாலும் கெடுக்க இயலா நலமுடைய பெரியாரவர், வாழி, அங்கு முளர் இங்குமுளர் எங்கு முளர்.

சாமர்த்தியமெல்லாம் எதனில் அடங்கியுளது? வீட்டிலும், பள்ளிக்கூடத்திலும், பொதுக்கூட்டத்திலும், உத்தியோகத்திலும் வர்த்தகத்திலும் சாமர்த்தியசாலிகளா யிருப்பவர் யாவர்? தன்னொடு தொடர்பவர் பின்னாகத் தான் முன்னேகும்வகையினைச் சூழவல்லவர்களது சாமர்த்தியமே பாராட்டப்படுகின்றது. நலமென்றுநினைப்பதைத் தாமேமுன்சென்றுகைப்பற்றவிரைவதும் தீதென்று நினைப்பதைப் பிறர்பால் செலுத்திவிடுவதும் சாமர்த்தியத்தின் இருபெருங்குவடுகள். வகுப்பில் முதலாகநிற்கின்ற மாணவனைப் பாராட்டுகின்றார் உலகமாந்தர்; அவனும் மகிழ்வும் ஊக்கமும் பெரிது கொள்கின்றான். உற்று நோக்கினாலன்றி இதனால் விளையுங் கொடுமை உணரற்பாலதன்று. செருக்கொருபுறமும் பொறாமை மறுபுறமும் கனற்றிவைப்பதன்றி இத்தகைய மனப்பான்மை செய்வதோ வேறிலது. ஒவ்வொரு நிமிடமும் அப் பிள்ளை, தனக்குப் பின்னானவர்களை இகழவும், முன்னானவர்களோடு இகலவும் பயில்பவனாகின்றான். இவ்விகல் நல்லதென்பார் பலர், அதனை healthy competition என அழைக்கின்ற விபரீதத்தை அறியாதாரே. பள்ளியில் கற்ற இந்தப் பழக்கத்தையே பின் வாழ்நாள் முழுவதும் தலைக்கொண்டு உலகத்தை உழக்குகின்றனர் இக் காலமக்கள்.

இளைத்திருந்தால் யாவரும் ஏய்த்துவிடமாட்டரோ வென்பதெல்லாம்வம்பே. ஏய்ப்பதே கருமமாயின்ஒவ்வொருவனுக்கும் அவனைவிட, இளைத்தவனு மிருப்பான் வலுத்தவனுமிருப்பான். எனின், இளைத்தவரை விழுங்கிவிட்டு வலுத்தவர்வாய்க் கிரையாவதால் யாது பயன்? "நலிவாரெல்லாம் என்னை நலிக, யாரையும் யான் நலியமாட்டேன்" என்றிருப்பவனே எந்நாளு முயர்ந்தவன். இதுதான் சாதுவின் இலக்கணம். இச் சாதுநிலை இருதிறத்தும் புண்ணியம் புரிதற்குரியது. நலியப்பெற்றான் அதனால் நன்மையே பெறுவான்; நலிந்தவனும் அவர் நற்குணத்தால் நாணமேயடைந்து நல்லவனாதலுங் கூடும். சிங்கத்தைப் பாழுங்கிணற்றில் வீழ்த்திய முயலொன்றின் கதையைக் கேட்டிருக்கின்றோம், இம்முயலின் சாமர்த்தியத்தைச் சிந்திக்குங்கால் பிள்ளைமதியால் நாம் சிறிதுபோது வியக்கலாம். வியந்து, இருந்தால் நாமும் அம் முயல் போன்றல்லவோ இருக்கவேண்டுமென்றெண்ணுவோம். மற்று, காகத்தின் தீங்குரலைக் கேட்கவிழைந்ததாய் அதன் வாயிலிருந்த இறைச்சித்துண்டை வஞ்சித்துண்ட நரியின் சூழ்ச்சியும் உள்ளத்தைக் கவராதொழியுமோ. அங்குச் சிங்கமும் இங்குக் காகமும் நமது நகைப்பிற்கே பாத்திரமாகின்றன. ஆனால், நமதுள்ளமோ ஆராதிக்கப் புகுவது வஞ்சனைவீரர்களாய் விளங்குகின்ற முயலையும் நரியையுமே யாகும். "புத்திமான் பலவானவான்" என்று முயற்கதைக் குரைத்த பாடம் இந்நரிக்கதைக்கும் ஒவ்வாதோ. சாமர்த்தியசாலிகளின் கதைகள் இவை. சாதுவின் கதையொன்று கேட்க வேண்டுமாயின்,

பேடையைப் பிடித்துத் தன்னைப்
பிடிக்கவந் தடைந்த பேதை
வேடனுக் குதவி செய்து
விறகிடை வெந்தீ மூட்டிப்
பாடுறு பசியை நோக்கித்
தன்னுடல் கொடுத்த பைம்புள்
வீடுபெற் றுயர்ந்த வார்த்தை
வேதத்தின் விழுமி தன்றோ.

என்று பாடிய கம்பநாட்டாழ்வாரையே நாடவேண்டும். இப்புள்ளின் செயலோ, முயலின் அம்முயற்சியோ மானுடப்பெருமையையும் நம் மனத்தின் மாட்சியையும் உயர்த்துதற் குரியகொள்கை?

"சாதுக்களே ஆசீர்வதிக்கப் பெற்றவர்கள்" (Blessed are the Meek) என்று திருவாய்மலர்ந்தருளினர் ஏசுகிறிஸ்துநாதர். மெய்ந்நெறி உரைகளெல்லாம் இதனையே முழங்குகின்றன. கண்ணபிரான் பசுக்களுக்குப்பின் சென்றதும் சாதுக்களே தனக்குகந்தவர் என்பதைக் காட்டுதற்கே யன்றோ.

சாமர்த்தியத்தில் சிந்தனை செல்லவொட்டாமல் சாதுக்கள்பால் செலுத்துமொரு தூயகுணம் கலைகளிலேயே வாய்ந்துளது. கலைப்பயிற்சியைக் கைகடக்க விட்டுவிட்டு வேறுசில முயல்வதெல்லாம் கொல்லாமற் கொன்று எவரையும் விழுங்கிவிட வகைதந்த வித்தையைக் கற்பதேயாகும். எல்லோரும் இதனை உணரும்நாள் ஒன்று எய்துமேல் அதுவே உலகிற்கொரு நன்னாளாகும்.

இதனை நாம் வரைந்து முடிக்கின்ற சமயத்தில், சென்றவாரம் சென்னையில் நடைபெற்ற வான்மீகி தினத் திருவிழாவில், வடமொழியொடு ஆங்கிலமும் அரிதிற் கற்றவரும் நியாயாதிபதியா யிருப்பவரும், அறிவு ஒழுக்கங்களால் இத்தென்னாட்டில் பெரும் புகழ் வாய்ந்தவருமான ஸ்ரீமான் K. S. இராமசுவாமி சாஸ்திரியாரவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவைப் பத்திரிகையிற் கண்ணுற நேர்ந்தது. (அவ்வுபந்நியாசத்தின் சாரம் இவ்விதழின் இறுதியில் எழுதப் பெற்றிருக்கின்றது) — தற்கால மனப்போக்கைப் பற்றி இத்தலையங்கத்திலும் மற்றவிடங்களிலும் 'கலா நிலயம்' குறிக்கொண்டு, மெய்வாழ்க்கைத் தத்துவத்தை வற்புறுத்துகின்ற வாசகங்கள் பலவற்றின் எதிரொலி அப்பெரியாரின் மொழிகளில் கேட்பதை உன்ன உன்ன மகிழ்கின்றோம். வாழ்க்கையின் உண்மைத்தத்துவம் இன்னதென்று அறியவல்ல கல்வியுடையார்பல ரிருக்கலாமெனினும், அக்கல்வியை அறிவாக்கி அறிவை உரையாக்கி, உலகம் உய்யவேண்டுமே யென்னும் ஆர்வத்தோடு உதவுகின்றவர் மிக அருமை. ஆர்வம் இருப்பினும், இப்படிப்பேசினால், தற்காலத்தவர், "இவன் யார் ஓர் பண்டைமகன்" என நகைப்பரோ யென்று வாய்திறக்க அஞ்சுவார் சிலர். இன்னவர்களுக்கிடையே ஸ்ரீமான் இராமசுவாமி சாஸ்திரிகள் அன்பும் அறிவும் வீரமும் ஒருங்கே தாங்கிக் "கலைகளே நம்மைத் தருமத்திலுய்க்க, அத்தருமமே எல்லா நலங்களையும் விளைவிக்குமாதலால் மற்ற முயற்சிகளெல்லாம் வீண்" என்று பொருள்படவிளம்புமளவில், ஒக்கநினைப்பார் உறவுபெற்ற மகிழ்வினால் "கலாநிலையம்" பெருகுகின்றது. கடவுளிற்கும் கலைஞருக்கும் அடுத்தபடியாய்த் தோன்றாத் துணையென உலகினை நின்றளிக்கும் உத்தமர், கடவுள்நினைவையும் கலையின் உணர்வையும் மக்களிடைப் பாய்ச்சி வளர்க்கும் ஸ்ரீமான் சாஸ்திரியார் அனையவரென்பதிற் சிறிதேனு மையமில்லை.

7 8MAY 1930

அப்பர்

8. அப்பரும் அறுபத்திநான்கு கலைகளும்

7. யுத்தக்கலை அல்லது சங்கிராம விலக்கணம்.

[285-வது பக்கத் தொடர்ச்சி]

(iii) போர்முறை—புறப்பொருட் டிணைகள்.

சிவபெருமானைப் போர்வீரனாக உருவகப்படுத்திய தேவாரப் பாசுரங்களால், புறப்பொருள் திணைகளனைத்தையும் விளக்கலாகும். புறப்பொருள் எழுவகைத் திணைகளென்பர். அவற்றின்விவரம், வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் என்பன. வெட்சியென்பது பகைவர் ஆநிரை கவர்தல். இதை மீட்கும் கரந்தையும் * வெட்சியி லடங்கும் †. வெட்சி யென்பது ஒருவகைப் பூ ‡.

நிரை கவரச்சொல்வோர், இப்பூவைச் சூடிச் செல்வது போர்முறையாதலால், நிரையைக் கவருந்தொழிற்கு வெட்சியென்பர். போர்வீரனான பரமன் எவ்வித நிரைகவரச் செல்வான் என வினவின், அடியார் இன்னலென்னும் நிரைகவர மாறுவேடத்துடன் செல்வன். தேவாரத்தில் பெரும்பாலும் இத்தகைய உருவக வெட்சி காணப்படும் சந்தர்ப்பம், விசயன் தவஞ்செய்யு மிடத்திற்கு வேடுவனாய்ச் சென்ற $ கருணையை விளக்குவதாம். (உ - ம்)

கானவன்காண் கானவனாய்ப் பொருதான் றான்காண்
கனலாட வல்லான்காண் கையி லேந்தும்
மானவன்காண் மறைநான்கு மாயி னான்காண்
வல்லேறொன் றதுவேற வல்லான் றான்காண்
ஊனவன்கா னுலகத்துக் குயிரா னான்காண்
உரையவன்காண் உணர்வவன்கா னுணந்தார்க்
[கென்றும்
தேனவன்காண் டிருமுண்டீச் சரத்து மேய
சிவலோகன் காணவனென் சிந்தை யானே.

திருமுண்டீச்சரம் - திருத்தாண்டகம் 5.

இதன்றியும், சிவபெருமான் தாருகவனத்திற் சென்று இருடியர் பத்தினிகள் கற்பு சிதற வளைகவர்ந்ததையும் வெட்சிக்கு * உதாரணமாக உருவகத்தில் காட்டலாம்.

தொட்டிலங்கு சூலத்தர் மழுவா ளேந்திச்
சுடர்க்கொன்றைத் தாரணிந்து சுவைகள் பேசிப்
பட்டிவெள் ளேறேறிப் பலியுங் கொள்ளார்
பார்ப்பாரைப் பரிசழிப்பா ரொக்கின் றாராற்
கட்டிலங்கு வெண்ணீற்றர் கனலப் பேசிக்
கருத்தழித்து வளைகவர்ந்தார் காலை மாலை
விட்டிலங்கு சடைமுடியர் வேத நாவர்
வெண்காடு மேவிய விகிர்த னாரே.

திருவெண்காடு - திருத்தாண்டகம் 6.

இவ்வாறு தாருகவன முனிவரதுபத்தினிகளைப் பரிசழித்தபோல் ஆரம்பமாக, அன்னோர் தவத்தின் மகிமையால் ஏவி வந்த புலி, யானை, அரவம், முயலகன், மழு, மான் முதலியனவற்றைத் தக்கவாறு விதிப்பித்தும், மிதித்துப், ஏற்றும், கிழித்தும், உரித்தும், போர்த்தும், அணிந்தும் சிவபெருமான் துளங்கிவிளங்கினர். இக்கதைவிளக்கமே வெட்சிமுதல் வாகையீறும்† புறப்பொருட் டிணைகளுக்கு‡ உதாரணமாம்.

கரந்தை யென்பது ஒருவகைப் பூண்டுபோன்ற சிறுசெடி. இது பலவகைத்து-சிவக்கரந்தை *, சடைக்கரந்தை (சிவக்கரணை, சடைக்கரணை) யெனப் பகரப்

* "முருந்தே ரிளநகை காணாய்நின் னையர்
கரந்தை யலறக் கவர்ந்த வினநிரைகள்"
சிலப்பதிகாரம் - வேட்டுவவரி.

† "பிறர் நாட்டுக்
கட்சியுங் கரந்தையும் பாழ்பட
வெட்சி சூடுக விறல்வெய் யோனே" ஷை

‡ வெட்சி தாழை கட்கம ழாம்பல்
சேட னெய்தல் பூளை மருதங்
கூடி முடித்த சென்னிய னீடொளிப்
பொன்னென விரித்த நன்னிறச் சாந்தந்
தன்னொடு புனைந்த மின்னிற மார்பினன்
சிலப் - அழற்படுகாதை 68 - 72.

$ பார்த்தனோ டமர்பொருது பத்திமை காண்பர் போலும்
கூர்த்தவா யம்பு கோத்துக் குணங்களை யறிவர் போலும்
பேர்த்துமோ ராவகாழி யம்பொடுங் கொடுப்பர் போலும்
தீர்த்தமாம் பழனை மேய திருவாலங் காட னாரே.
திருவாலங்காடு - திருநேரிசை 5

* வீரமும் பூண்பார் விசயனோ டாயதோர்
தாரமும் பூண்பர் தமக்கன்பு பட்டவர்
பாரமும் பூண்பர் நற்பைங்கண் மிளிரா
வாரமும் பூண்பா ரரநெறி யாரே.
திருவாரூர்நெறி - பண்இந்தளம் 2.

வேடனாய் விசயன்றன் வியப்பைக் காண்பான்
விற்பிடித்துக் கொம்புடைய வேனத்தின்பின்
கூடினா ருமையவளுங் கோலங் கொள்ளக்
கொலைப்பகழி யுடன்கோத்துக் கோரப் பூசல்
ஆடினார் பெருங்கூத்துக் காளி காண
வருமறையோ டாறங்க மாய்ந்து கொண்டு
பாடினார் நால்வேதம் பாசூர் மேய
பரஞ்சுடரைக் கண்டடியே னுய்ந்த வாறே.
திருப்பாசூர் - திருத்தாண்டகம் 5.

† வெட்சி வஞ்சி யுழிஞை தும்பை
யுட்குவரு சிறப்பின் வாகையொடு காஞ்சி
பாடாண் டிணையு முளப்படத் தொகைஇ
நாடுங் காலை யெழுவகைத் ததுவே.
இலக்கண விளக்கம் 600.

‡ வெட்சியு முழிஞையும் வேற்றுவினை யுடைமையி
னுட்குவரு கரந்தையு நொச்சியுஞ் சூடுத
லவ்வினை மருங்கி லமைந்ததொல் வழக்கே.
இலக்கண விளக்கம் 601.

* [சிவபூசைக்குச் சிறந்ததோர் பத்திரமாம்.]
கரந்தையும் வன்னியும் மத்தமும் கூவிளம்
பரந்தசீர்ப் பரவையுண் மண்டளி யம்மானை
நிரம்பிய வூரனுரைத்தன பத்திவை
விரும்புவார் மேலையார் மேலையார் மேலாரே.
சுந்தரர்.

படுவன. இதில் சிவக்கரந்தை † சிறந்ததோர் மூலிகை யாகும். இது கிடைப்பதரிது. எங்கும் கிடைப்பது சடைக்கரந்தை. இதில் பூக்கும் மலர்கள் பலநாள் உலர்வதில்லை. கரந்தையணிந்து ஆநிரை மீட்கச் செல்வது பண்டைக்காலத்திய போர்மரபு. தேவாரத்தில் உருவகப்படுத்தும் கரந்தை "மாசார் பாச மறுத்து" நேசமாய்க் காத்தலாம்:—

பந்த பாச மறுத்தெனை யாட்கொண்ட
மைந்த னைமண வாளனை மாமலர்க்
கந்த நீர்க்கடு வாய்க்கரைத் தென்புத்தூர்
எந்தை ஈசனைக் கண்டினி தாயிற்றே

திருக்கடுவாய்க்கரைப்புத்தூர் திருக்குறுந்தொகை 6.

மார்க்கண்டேயர்மீது பாசம் வீசி யமன் உயிர் வவ்விய போது, சிவலிங்கத்தினின்று வெளிவந்து காலனை யுதைத்துக் கொன்று அவர் உயிர் மீட்டதும் ஒரு வகைக் கரந்தையேயாம்:—

கண்டத் தான்கறுத் தான்கால னாருயிர்
பண்டு கால்கொடு பாய்ந்த பரமனார்
அண்டத் தோங்குமண் ணாமலை கைதொழ
விண்டு போகுநம் மேலை வினைகளே

திருவண்ணாமலை, திருக்குறுந்தொகை 8.

ஞாலத்தை யுண்டதிரு மாலு மற்றை
நான்முகனு மறியாத நெறியான் கையில்
சூலத்தா லந்தகனைச் சுருளக் கோத்துத்
தொல்லுலகிற்பல்லுயிரைக் கொல்லுங்கூற்றைக்
காலத்தா லுதைசெய்து காதல் செய்த
வந்தணனைக் கைகொண்ட செவ்வான் வண்ணர்
பாலொத்த வெண்ணீற்றர் பாசூர் மேய
பரஞ்சுடரைக் கண்டடியே னுய்ந்த வாறே.

திருப்பாசூர் - திருத்தாண்டகம் 9

கரந்தை கூவிள மாலை கடிமலர் கொன்றையுஞ்சூடிப்
பரந்த பாரிடம் சூழ வருவர்நம் பரமர்தம் பரிசால்
திருந்து மாடங்கணீடு திகழ்திரு வாஞ்சியத் துறையும்
மருந்த னாரடி யாரை வல்வினை நலியவொட் டாரே.
சுந்தரர்.

† "பாலின் மொழியாளோர் பாகங் கண்டேன்
பதினெண் கணமும் பயிலக் கண்டேன்
நீல நிறமுண்ட கண்டங் கண்டேன்
நெற்றி நுதல் கண்டேன் பெற்றங் கண்டேன்
காலை கதிர்செய் மதியங் கண்டேன்
கரந்தை திருமுடிமேற் றோன்றக் கண்டேன்
மாலைச் சடையு முடியுங் கண்டேன்
வாய்மூ ரடிகளைநான் கண்ட வாறே"

திருவாய்மூர் - திருத்தாண்டகம் 2.

தொண்டர் பிறவிக்கடலிலே படுந் துன்பம் பிணி நல்குரவு முதலியனவற்றில் சிக்குண்ண, அவற்றினின்று சிவபெருமான் அவரைமீட்பதும் ஒருவகைக் கரந்தை யன்றோ?

நசையானை நால்வேதத் தப்பா லானை
நல்குரவுந் தீப்பிணிநோய் காப்பான் றன்னை
இசையானை யெண்ணிறந்த குணத்தான் றன்னை
யிடைமருது மீங்கோயு நீங்கத் தேற்றின்
மிசையானை விரிகடலு மண்ணும் விண்ணு
மிகுதியும் புனலெறிகாற் றாகி யெட்டுத்
திசையானைத் திருவானைக் காவு ளானைச்
செழுநீர்த் திரளைச்சென் றாடி னேனே.

திருவானைக்கா - திருத்தாண்டகம் 9.

இம்மாயப் பிறப்பென்னுங் கடலாந் துன்பத்
திடைச் சுழிப்பட் டிளைப்பேனை யிளையாவண்ணம்
கைம்மான மனத்துதவிக் கருணை செய்து
காதலரு ளவைவைத்தாய் காண நில்லாய்
வெம்மான மதக்கரியி னுரிவை போர்த்த
வேதியனே! தென்னானைக் காவுண் மேய
அம்மான்! நின் பொற்பாத மடையப் பெற்று
லல்லகண்டங் கொண்டடியே னென்செய் கேனே

திருவானைக்கா - திருத்தாண்டகம் 5.

இறைவனை பதி அடியார்களான பசுக்களை எத்தகைய துன்பத்திலிருந்து மீட்பதும், தடுத்தாட்கொள்வதும் கரந்தையேயாம்.

அஞ்சைக் களத்துள்ளா ரையாற் றுள்ளார்
ஆரூரார் பேரூரா ரழுந்தூ ருள்ளார்
தஞ்சைத் தளிக்குளத்தார் தக்க ளூரார்
சாந்தை யயவந்தி தங்கி னார்தாம்
நஞ்சைத் தமக்கமுதா வுண்ட நம்பர்
நாகேச் சரத்துள்ளார் நாரை யூரார்
வெஞ்சோற் சமண்சிறையி லென்னை மீட்டார்
வீழி மிழலையே மேவி னாரே.

திருவீழிமிழலை - திருத்தாண்டகம் 8.

வெட்சியும் கரந்தையும் குறிஞ்சித்திணைக்குப் புறனெனப்படும் *.

* வெட்சி தானே குறிஞ்சியது புறனே
யுட்குவரப் பொருபோ ருறுமுறை தொடங்கிய
வேந்துவிடு முனைஞர் வெற்றிப்புலக் களவி
னதந் தோம்பலு மந்நிரை மீட்டலு
மெனவிரு பாற்றே யஃதென மொழிப.

புறத்திணையியல் (இலக்கண விளக்கம்) 602.

தமிழ்ப் பாடம் 118.

வில்லி பாரதம்—உத்தியோக பருவம்

[287-வது பக்கத் தொடர்ச்சி.]

கிருஷ்ணன் தூதுச் சருக்கம்.

விதுரன் இயற்றிய விருந்தினை அருந்திக் கண்ணன் உவந்திருக்க அந்தியும் வரலாயிற்று. அந்தியின் வருகை முதலிய வருணனைகள் அமைந்த செய்யுள்கள் ஒன்பது இதன் முன் விடலாயின.

பொங்க ராவணை பொலிவறப் போந்தபின் பொதுவர்
தங்கள் பாடியில் வளர்ந்துமா மருதிடைத் தவழ்ந்த
கங்கை மாநதி கால்வழி கருணையங் கடலே
யிங்கு நீதனி நடந்தவா றுரைத்தரு ளென்றான். 46

வந்தசெய்தி யாதெனக் கண்ணனை விதுரன் வினவுகின்றான்.

பதவுரை.

பொங்கு - பொங்குகின்ற, அரா அணை - ஆதிசேஷனாகிய பாம்பின் படுக்கை, பொலிவு - பொலிவு, அற - நீங்கும்படி, போந்தபின் - (அப்படுக்கையினின்று) இவ்வுலகு வந்தபிறகு, பொதுவர் தங்கள் - இடையர்களுடைய, பாடியில் - ஊரில், வளர்ந்து - வளர்ந்து, மருது இடை - மருதமரங்களுக்கு இடையிலே, தவழ்ந்த - தவழ்ந்துசென்றவனும்,

கங்கை மா நதி - கங்கையாகிய பெரிய நதி, கால் - பாதத்திலிருந்து, வழி-வழிந்தோடப்பெற்ற, கருணை- கருணை நிறைந்த, அம் - அழகிய, கடலே, - கடலைப் போன்றவனும் ஆயவனே, நீ - திருமாலாகிய நீ, இங்கு - இந்நகருக்கு, தனி - தனியாக, நடந்த ஆறு - வந்தடைந்த காரணம், உரைத்தருள் - சொல்லி அருள்வாய், என்றான்-என்று விதுரன் கேட்டான்.

கௌரவர் விதித்தபடி காடுசென்று கடவநாள் கழித்துவந்த பாண்டவர்க்குரிய பாகத்தைப் போரிலாவழி அவர் பெறும்பொருட்டுத் தூதுவந்துளேன் என்று, கண்ணபிரான் விதுரனுக்கு விடை உரைத்ததும், போரொன்று இலாது பாண்டவர் தம்பாகத்தைத் துரியோதனன் தாரான் என்று விதுரன் மொழிந்ததும் கொண்டுள பன்னிரண்டு பாசுரங்கள் இதற்குப்பின் விடலாயின.

காவன் மன்னவர் முகங்க டோறுமிரு
கண்பரப் பியமர் கருதுவோ
ரேவ லின்கண் வருதூத னாமிடைய
னின்றுநம் மவையி லெய்தினா
லோவ லின்றியெதிர் சென்று கண்டுதொழு
துறவுகூ றிலினி யுங்களூர்
தீவ லஞ்செய வடர்ப்ப னென்றுநனி
சீறினான் முறைமை மாறினான். 47

தன் னவையின்கண் கண்ணன் எய்துங்கால், அவனுக்கு முகங்கொடுத்து வரவேற்க லாகாதெனத் தன் பரிஜனங்களுக்குத் துரியோதனன் கட்டளை இடுகின்றான்.

பதவுரை.

முறைமை - ஒழுங்கு, மாறினான் - கடந்தவனான துரியோதனன், காவல் மன்னர் - காக்கும் தொழிலுடைய அரசர்களது, முகங்கள் தோறும்,-ஒவ்வொருவர் முகத்தையும் தனித்தனி, இருகண் பரப்பி - தனது இரு கண்களால் நோக்கி, அமர் கருதுவோர்- போர் செய்யும் கருத்துடைய பாண்டவர்களது, ஏவலின்கண் - ஏவலினால், வரு - வந்திருக்கின்ற, தூதன் ஆம் - தூதுவனாகிய, இடையன் - இடையனாகிய கண்ணன், இன்று - இன்றைக்கு, நம் அவை - நமது சபையினிடம், எய்தினால்- வந்து அடைந்தால்,

(நீங்கள்) ஓவல் இன்றி - குறைவு இல்லாதபடி, எதிர்சென்று - வரவேற்க எதிரே சென்று, கண்டு- அவனைக்கண்டு, தொழுது - வணங்கி, உறவு கூறின் - சிநேகம் பாராட்டுவீர்களேயானால், இனி - அதன் மேல்,

உங்கள் ஊர் - உங்களது ஊர்களை, தீ வலம் செய- நெருப்புச் சூழும்படி செய்து, அடர்ப்பன் – போர் செய்வேன், என்று - என்று கூறி, நனி சீறினான் - அதிகமாகக் கோபித்துக் கொண்டான்.

விரிவுரை:-துஷ்டரது குணங்களும், அவர்களுக்கு வரவிருக்கும் கேட்டிற்கு முன் னறிகுறியும் இவையென்பதும், இச்செய்யுளில் நன்கு விளங்குகின்றன. கண்ணனும் ஓர் வேந்தனேயாயினும் சாதியில் இடையன் என்று துரியோதனன் அவனை இகழ்ந்தது ஒன்று. இனி, கண்ணனே பரமபதநாதன் என்பது துரியோதனன் அறியாத தன்று. ஈச்வரனை எதிர் சென்று வணங்கி வழிபடவேண்டாவென்று மற்றவரைத் தகைதலும் தீக்கொண்டு அவரை அச்சுறுத்துவதும், தானும் பாழாகி மற்றவரையும் பாழாக்க முயன்றுநிற்போர் சொல்லும் செயலுமாம் என்பது இத்துரியோதனனிடத்தில் தோன்றலாகின்றது. எக்காலத்திற்கும் இயைந்ததோர் இயற்கை யிது.

துன்னு கங்கை மகனுந் துரோணனொடு
சுதனு நீதிபுனை விதுரனு
மன்னர் மன்னனை யொழிந்த மன்னவரும்
வந்து சேவடி வணங்கினார்
கன்ன னுந்தலை கவிழ்ந்தி ருந்தன
னழன்றுளஞ் சகுனி கருகினான்
முன்ன நின்றவர்க ளிட்ட பீடமிசை
மொய்துழாய் முகிலு மெய்தினான் 48

துரியோதனன், கர்ணன், சகுனி என்னும்இம்மூவரைத்தவிர மற்றெல்லோரும் கண்ணனை வணங்கி வரவேற்றனர்

பதவுரை.

துன்னு கங்கை மகனும்- நீர் அடர்ந்த கங்கையின் மகனான பீஷ்மனும், துரோணன் ஒடு - துரோணனுடன், சுதனும்-அவன் மகனாகிய அச்வத்தாமாவும், நீதி- நீதியை, புனை-ஆபரணமாக அணிந்திருக்கின்ற, விதுரனும் - விதுரனும், மன்னர் மன்னனை - மன்னர்க்கு மன்னனான துரியோதனனை, ஒழிந்த - தவிர்ந்த, மன்னவரும் - எல்லா அரசர்களும், வந்து- கண்ணனுக்கு எதிர் வந்து, சே அடி - (அவனது) சிவந்த பாதங்களை, வணங்கினர்- வணங்கினார்கள்.

கன்னனும் - கர்ணனும், தலைகவிழ்ந்து - வெட்கத்தால் குனிந்துகொண்டு, இருந்தனன் - இருந்தான். சகுனி - சகுனியானவன், உளம் அழன்று - உள்ளம் நெருப்பற்றி எரிய, கருகினான் - கருகினான்.

மொய் - அடர்ந்த, துழாய் - துளசிமாலை அணிந்த, முகிலும் - மேகம்போன்ற கண்ணனும், முன்னம் நின்றவர் - தன் முன்னே நின்றவர், இட்ட- போட்ட, பீடமிசை - ஆசனத்தில், எய்தினான் - அமர்ந்தான்.

விரிவுரை:—"தீ வைத்து உங்களூர்களை அழித்திடுவேன், எதிர் சென்று யாவரும் வணங்காதீர்" என்று துரியோதனன் இட்டிருந்த கொடிய கட்டளையை மன்னரனைவரும், பீஷ்மன் துரோணன் முதலாயினோரும் மீறினார். ஈசுவரனை நேரே கண்டபின் அவனை இறைஞ்சாமல் மனிதனொருவனது உத்தரவு தடுப்பது இயலாது. கபவரிலும் கடையானகபவராகிய துரியோதனனும் சகுனியுமே சும்மாவிருந்தனர் 'விதித்தபணி மறுத்து இவ்வண்ணம் நம் கண்முன்னே போய் அப்பகைவனது காலில் விழுகின்ற இம்மன்னர்களை நம்பியோ நாம் இனிப் பாரதப்போர் புரிய வேண்டும்' என்ற வெறுப்பும் அச்சமும் மிகுவதால் சகுனி அழன்று உளம் கருகினான். இத் துரியோதனனது சோற்றைத் தின்றிருப்பதாலன்றோ, எம்பெருமான் எளிதில் வந்தெய்தவும் தான் சென்று எதிர்கொள்ளாமற் கிடக்கலாயிற்று என்ற பரிபவமும்

இரக்கமும் மிகுந்ததால் தலைகவிழ்ந்திருந்தனன் கர்னன். இதனைக்கருதியே பின் போர்க்களத்தில் உயிர்நீங்கும் எல்லையில் துரியோதனனுக்குத் தான் செஞ்சோற்றுக்கடன் கழித்ததாகக் கூறுகின்றான் கர்னன்.

இலக்கணம்.

C. மூன்றாம் வேற்றுமை.

மூன்றாம் வேற்றுமைக்கு உரிய உருபுகள், ஆல் ஆன் ஒடு ஓடு உடன், என்பன. வாளால் குத்தினான், இராமனோடு சென்றான் என்பனபோல் வேற்றுமை உருபு விரிந்து வருதலும், தலை வணங்கினான் (தலையால் வணங்கினான்) என்பதுபோல் வேற்றுமை உருபுமாத்திரம் தொக்குவருதலும், இரும்புப்பெட்டி (இரும்பால் செய்த பெட்டி) என உருபும் பயனும் உடன் தொக்கு வருதலுங் கூடும்.

I. நிலைமொழி ஒடு அல்லது ஓடு என்னும் மூன்றாம் வேற்றுமை உருபுபெற்ற சொல்லாயின் வருமொழி முதல் வல்லினமெய் மிகாது:—

தாயொடு + கன்று = தாயொடுகன்று
புகழோடு + செல்வம் = புகழோடுசெல்வம்
யாரொடு + சொல்வேன் = யாரொடு சொல்வேன்
வில்லோடு + கணை = வில்லோடுகணை

II. மூன்றாம் வேற்றுமை உருபுமாத்திரம் தொக்கிருக்கின்ற தொகைநிலைத்தொடர்கள் அதிகம் வழங்குவதில்லை. மூன்றாம் வேற்றுமைத்தொகை எனக் கருதக்கூடிய சிலதொடர்கள் பெரும்பாலும் ஏழாம் வேற்றுமைப் பொருள்களைக் குறித்தலுங் கூடும். தலைசுமந்தான், என்பது தலையால் சுமந்தான் என மூன்றன் தொகையாகலாமாயினும், தலையிற் சுமந்தான் என ஏழாம் வேற்றுமையாக விரியினும் விரியலாம்.

செய்வினைகள் சிலபோது செயப்பாட்டு வினைப் பொருளில் வருதல் கூடுமென்பதை முன்னர்ச் சொல்லியிருக்கின்றோம். (1வது வால்யூம், 1017-வதுபக்கம்) செயப்பாட்டுவினைப் பொருளுடையவாய், செய்வினை உருவத்துடன் வருகிற சொற்களுக்குமுன் நிற்கின்ற பெயர்கள் மூன்றனுருபு தொக்கவைகளாதல்கூடும்:—

பாம்பு கடித்த பையன்—இதனில் கடித்த என்பது செய்வினை உருவத்தி லிருந்தாலும், கடித்ததாகிய காரியத்தைச் செய்வதன் பையனல்லன். கடித்தலாகிய காரியத்தைச் செய்யப்பட்டவன் அவன். ஆகையால், கடிக்கப்பட்ட பையன் என்பது பொருள். எனவே, "பாம்பினால் கடிக்கப்பட்ட (பையன்) என விரியும். இது மூன்றன் தொகை. தமிழில் செயப்பாட்டுவினையை (Passive voice) அதிகம் பயில்வதில்லை. செயப்பாட்டுவினைப்பொருள் வருதற்கும் செய்வினைகளையே பெரும்பாலும் உபயோகிக்கின்றனர். எனினும், பேய் பிடிக்கப்பட்டான், புலி கடிக்கப்பட்டான், (பேயால் பிடிக்கப்பட்டான், புலியால் கடிக்கப்பட்டான்) எனச் செயப்பாட்டு வினைகளுக்குமுன் மூன்றாம்வேற்றுமை தொக்க பெயர்கள் நிற்பதும் உண்டு.

(1) நிலைமொழி, மூன்றாம்வேற்றுமை உருபுமாத்திரம் தொக்கு, உயிரிலேனும் யகர ரகர ழகர மெய்களிலேனும் முடிகிற பெயர்களாயிருக்க, வருமொழி முதலில் வல்லினமெய் வருமானால் அவ் வல்லினமெய் மிகுவதில்லை:—

பாம்புகடித்த(பையன்) = பாம்புகடித்த(பையன்)
துயர்பிடித்த(வேந்தன்) = துயர்பிடித்த(வேந்தன்)
பேய் + பிடிக்கப்பட்டான் = பேய்பிடிக்கப்பட்டான்
புலி + கடிக்கப்பட்டான் = புலி கடிக்கப்பட்டான்
பறை + சாற்றினான் = பறை சாற்றினான் (பறையால் சாற்றினான்).

(2) நிலைமொழி ஐகாரத்துடன் சேராத, ஓரெழுத்து ஒருமொழியா யிருக்குமாயின், மூன்றன் தொகையில் வருமொழி வல்லினமெய் மிகும்.

தீ + சுட்டான் = தீச்சுட்டான் (தீயால் சுட்டான்)

குறிப்பு:—கைகாட்டினான் (கையால் காட்டினான்), கைதீண்டினான் (கையால் தீண்டினான்), என ஐகாரத்துடன் சேர்ந்து வருகின்ற ஓரெழுத்தொருமொழிகளுக்குப்பின் மிகுவதில்லை.

(3) நிலைமொழி இரண்டு எழுத்துக்களால் ஆன சொல்லாயிருந்து, அவைகளில் முதலெழுத்துக் குறிலும், மற்ற எழுத்து நெடிலுமாய் அமையுமாயின், மூன்றன் தொகையிலும் வருமொழிமுதல் வல்லினமெய் மிகும்:—

அரா + கடிக்கப்பட்டான் = அராக்கடிக்கப்பட்டான்
சுறா + பாயப்பட்டான் = சுறாப்பாயப்பட்டான்.

(4) மூன்றாம் வேற்றுமைத் தொகைநிலைத் தொடர்கள் சிலவற்றில் வல்லினம் மிகுந்தும் மிகாமலும் புணராலாகின்றது:—

பேய் + கோட்பட்டான் = பேய்க்கோட்பட்டான் (அல்லது) பேய்கோட்பட்டான்
புலி + கோட்பட்டான் = புலிக்கோட்பட்டான் (அல்லது) புலி கோட்பட்டான்
(கோட்பட்டான் = பிடிக்கப் பட்டவன்)

III. மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகையில், வருமொழிமுதல் வல்லினமெய் மிகுந்தே புணரும்:—

வெள்ளி + கிண்ணம் = வெள்ளிக்கிண்ணம், (வெள்ளியால் செய்த கிண்ணம்)
இரும்பு + பெட்டி = இரும்புப் பெட்டி.
கவி + கூற்று = கவிக்கூற்று (கவியினால் கூறப்பட்ட கூற்று)
உகிர் + குறி = உகிர்க்குறி (உகிரினால் செய்த குறி) (உகிர் = நகம்)
தவ(ம்) + புதல்வன் = தவப்புதல்வன் (தவத்தினால் பிறந்த புதல்வன்)
மெய் + போர் = மெய்ப்போர் (மெய்யால் செய்யும் போர்) மெய்—உடல்
ஊழ் + பயன் = ஊழ்ப்பயன். (ஊழால் வரும் பயன்)

குறிப்பு:—இவைகளிற் சிலவற்றை ஆறாம் வேற்றுமைத் தொகைகளாகவும் கொள்ள இயலும். ஆறாம் வேற்றுமைத் தொகையிலும் வல்லினம் மிகுமாதலால் இப் புணர்ச்சிவிதிவரையில் பேதமில்லை.

மானத சாத்திரம்

[PSYCHOLOGY]

[288-வது பக்கத் தொடர்ச்சி]

நடத்தை (Behaviour).

உலகமலர்ச்சிமுறையில் உயிருளிகள் உயர்நிலையடைவதற்குத் தாய்மை பெரிது முதவுகின்றது. தாய்மை உள்ளவரையில் மகவுகள் தம்மைப்பற்றிக் கவலைகொள்ள வேண்டுவதில்லை யன்றோ? இளமை என்பது உயிருளிகள், உலகமெனும் பள்ளிக்கூடத்தில் கல்விகற்கும் காலமாகும். பூச்சியோ, புழுநிலை மாறியதும் உலகில் உணவுதேடிப் பிழைக்கவேண்டும். மக்களின் பிள்ளைகளோ பதினான்டுவரை தாய் தந்தையரது நிழலின்கீழ் அமர்ந்திருந்து, உலகவெப்பத்தைத் தணித்துப் பொறுத்துக்கொள்ளும் முறையினைப் பலவகையாலும் பயில்கின்றனர். இயற்கைச் செயனிலை முற்றிவளர்ந்து அறிவுநிலையோடு நேரே இயைந்து திருத்தமுற்று உலகநிலையோடு பொருத்த முறுகின்ற காலமே இளமையாகும். தாய்மை இல்லையானால், இளமைஇல்லை; இளமை இல்லையானால், உலகப்பயிற்சியும் அறிவுவளர்ச்சியும் இல்லை; அறிவு வளர்ச்சி இல்லையானால், உலகமலர்ச்சியும் (Evolution) இல்லை.

தாய்மை என்பதே அறங்களுக்கு எல்லாம் அடிப்படையாக வுள்ளது. இயற்கைச்செயனிலை சிறப்பு நிலையுறுதலையும், பொதுநிலை யுறுதலையும் கண்டோம். பயிற்சிக்கு இடமுள்ள இளமைப்பொழுதில் இயற்கைச்செயனிலை பொதுநிலை யுறுகின்றது. இதற்கிணங்க, குழவியைப்பேணும் இயற்கைச்செயனிலையும் உலகம் முழுவதையும் தனக்குள்ளே வளைத்துக்கொள்கிறது. தன் குழந்தையைக் கண்டு எழும் இச்செயனிலை பால்மணமாறாப் பச்சிளங்குழந்தையைக்கண்டபோது அது யாருடையதாயினும், எங்குக் காணப்பட்டதாயினும், வளர்ந்தொளிர்கின்றது. பின்னர்க்குழந்தைபோல தம்மைத்தாமே காத்துக்கொள்ளமாட்டாத எவரைக் கண்டாலும் செயலுறுகின்றது. ஈதன்றோ அருள் என்பது. இதுபற்றியன்றோ திருவள்ளுவனார் "அருளென்னும் அன்பீன் குழவி" எனப் பாடுகின்றார்.

நல்லோரைக் காத்தலைக் கண்டோம்; தீயோரை அழித்தலும் தாய்மையின் செயலேயாம். பச்சிளங் குழவியின் கழுத்தைமுறுக்கி ஒருபழியாளன் கொல்வானானால், அவனது உடல்முழுதையும் சிறுகச் சிறுகக் கொந்தி எறிந்துவிட வேண்டுமென்று சினம் பொங்கி எழுகின்றதன்றோ? வட்டிக் கடையைக் கொள்ளையிடுகின்றான் ஒருவன். ஓடும் புகைவண்டியில் கொள்ளையடிக்கின்றான் மற்றொருவன். இவர்களைக் கண்டபோது அத்தகைய ஆறாத பெருஞ் சினம் எழுவதில்லை. அவர்களுடைய ஆற்றலையும் அறிவுத்திறத்தையும் மெச்சினாலும் மெச்சுவோம். ஆனால் குழந்தையை அடிப்பதையேனும் மனமாறாது எதிர் நின்று காணமுடியுமோ! இது பற்றியன்றோ,

> அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்
> மறத்திற்கும் அஃதே துணை.

என்று திருவள்ளுவர் பாடுகின்றார்.

தாய்மை என்பது பிற செயனிலைகள் செயலுற்று நின்றாலும் அவற்றை மாற்றிக்கொண்டு தானெழுந்து விளங்கும். மகவுக்குத் தீங்கு நேரிட்டபோது தனக்கியல்பான அச்சநிலைமாறிப் பகைமேற்பாயும் தாய்ப் பறவையையும் தாய்விலங்கையும் நாம் பார்த்ததில்லையா? உயிர்போகும்வரை சண்டைசெய்வதை நாம் கேட்டதில்லையா?

வெகுளி.—மகவுக்கு ஏதேனும்தீங்குநேர்ந்தபோது தாய் பகைமேல் பாய்வதனை நாம் பன்முறையும் கண்டுள்ளோம். பகைத்தல், கலாம் விளைத்தல் சண்டையிடலென்னும் இவ்வியற்கைச்செயனிலையில்தான் வெகுளி என்ற மெய்ப்பாடு எழுகின்றது. தாய்மை யுள்ள இடத்தே வெகுளியைக் காண்கின்றோமாகையால், குழவியைப் பேணுதலும் சண்டையிடலும் ஒரே செயற்கைச்செயனிலை என்று சொல்லுதல் கூடுமோ? அவ்வாறு முடிவுகட்டுவதற்கு இடமில்லை என யாவரும் எடுத்துரைப்பர். தாய்மை இல்லா இடத்தும் இவ்வெகுளி எழக் காண்கிறோ மன்றோ? தாய்மை பெண்களின் பிறப்பியல்பு எனக் கண்டோம். சில பெண்விலங்குகளிடத்தும் பறவைகளிடத்தும் சண்டையிடல் என்ற இயற்கைச்செயலே காணக்கிடைப்பதில்லை. பகைமையும் தாய்மையும் ஒன்றாய் இணைந்திருப்பது எதனாலே என ஐயம் எழலாம். மற்றைய இயற்கைச்செயனிலைகளோ, ஏதேனுமொரு காட்சிப் பொருளால் தூண்டப்பட்டபோதுதான் எழுகின்றன. ஆனால் கலாம்விளைத்தல் என்ற இயற்கைச்செயனிலையிலோ காட்சிப்பொருளாக எதனையும் குறிக்க முடியாது. ஏதேனும் இயற்கைச்செயல் தடைபட்டால் அதுபோது பகைத்தல் என்னும் இவ்வியற்கைச்செயலைக் காண்கின்றோம். அதுபற்றித்தான் தாய்மை தடைபட்டபோது வெகுளிபொங்குகிறது. அங்ஙனமே, அச்சம் தடைபட்டபோதும் வெகுளி எழக் காண்கிறோம்.

ஒரு சிறுவன் தன்னைவிடப் பெரியவனைக் கண்டு அஞ்சி நடுங்குகின்றான். பெரியவனோ இவனை ஓடஓட மிரட்டுகின்றான். தன்னுடைய கேடுநிலையை உணர்கின்றான் சிறியவன். அஞ்சிஓடினாலும் அப்பெரியவன் கையில் சிக்கிக்கொள்ளவேண்டுமென அவனுக்குத் தோன்றுகின்றது. அவ்வாறு அச்சம் தடைப்படுகிறது. என்செய்கின்றான் சிறுவன். முதுகு காட்டி ஓடியவன் மார்புகாட்டி எதிர்நின்று அப்பெரியவனைத் தாக்குகின்றான்; சீறிவிழுகின்றான். எனவே மற்றைய இயற்கைச்செயனிலைகள் இல்லாதபோது வெகுளியே இல்லை எனலாம்.

பகைத்தலில் தாக்கலும் (Attack) தாங்கலும் (Defense) காண்கிறோம். மாற்றான் வந்து தாக்குவதற்குமுன்னர் முன்னேற்பாடாக எதிர்நிற்பதும் ஒரு தாக்கலேயாம். அந்நிலையைக் கண்டதும் பகைவன் அஞ்சியோடினாலும் ஓடிவிடுவான். எனவே பகைத்தல் என்னும் இவ்வியற்கைச் செயனிலையில் இருவகையான செயல்களைக் காண்கிறோம். பகையை அச்சுறுத்தும் செயல்கள் ஒருவகையைச் சேர்ந்தவை,

பகைமேற் பாயும் செயல்கள் மற்றொருவகையானவை. கடித்தல், அடித்தல், உதைத்தல் முதலியவை பின்னினத்தைச் சேர்ந்தவை. வெகுண்டெழும் விலங்குகள் உடம்புவீங்கி எதிர்நிற்கின்றன. மயிர்க்கூச்செறியவும் கண்சிவக்கவும் பல்லெலாந் தெரியவும் விறைத்துப் பார்க்கின்றன. வாலை ஓங்கி அடிக்கின்றன. இடி என முழங்குகின்றன. இவை எல்லாம் பிறரை அச்சுறுத்துவதற்காக எழுவனவேயாம். போர்க்கோலம் கொள்வார், முகம் சிவந்ததுபோலப் பலநிறங்களை முகத்தில் பூசிக்கொண்டு, தோல் இறகு முதலியபூண்டு ஓவென் றிரைந்து நடப்பதைக் காட்டுமிராண்டிகளிடம் இப்போதும் காண்கின்றோம்.

வெகுளிவாய்ப்பட்டவன் தலையையும் கள்ளுடலையும் மிடுக்காகப் பின்னாகத் தள்ளிக் கையை முன்னாக வீசுகின்றான். கண்ணைக் குவித்து மூடுகின்றான்; மேல் வாயிதழைத் தூக்கி மூக்கை மூடுகின்றான். அவன் செயல்கள், பகைத்தபொருளை வெறுத்து முகத்தை ஒருபுறம் திருப்பிக்கொள்வதனையும், பகையை அச்சுறுத்துவதனையும் குறிக்கின்றன. சிறிது சினம் முற்றியதும், நெற்றியைநெறித்துக்கண்ணை அகலத்திறந்து பல்லை முழுதும்காட்டி நெறுநெறு எனக் கடிக்கின்றான், தரையைக் காலால் உதைக்கின்றான். பெருமூச்சு விடுகின்றான் உள் துடிப்பால் மூச்சுத் தடுமாறித் தயங்குகின்றான், ஓவென் றிரைகின்றான். ''விட்டேனா'' ''அப்படியா'' ''உம்'' என்று யாதானும் ஒரு சொல்லையோ ஓரசையையோ பன்முறையும் தானே சொல்லிக்கொண்டு நிற்கின்றான். அவன் குரல் நடுங்குகின்றது. காறி யுமிழ்கின்றான் திடீர் என வலி குன்றி விட்டதுபோலத் தோன்றுகின்றது. முகங்கோணி நின்று கையையும் காலையும் அசைக்கின்றான். தன் உகிரையும் வாயிதழையும் கையையும் கடித்துத் தன்னைத்தானே வருத்திக்கொள்கின்றான். நகை நகைக்கின்றான். முகம் சிவந்துநிற்கின்றான், கறுத்து நிற்கின்றான். சிலபோது அவன் முகம் வெளுத்துப்போகின்றது. மூக்கு அகலமாகித் துடிக்கின்றது மயிர்க்கூச்செறிந்து மயங்குகிறான். ஈதே வெகுளியின் வடிவம்.

பகைத்தல் என்ற இயற்கைச்செயலுக்கு ஏற்ற உறுப்புக்கள் பல விலங்குகளுக்கு இயற்கையில் அமைந்துகிடத்தலைக் காண்க. கொம்புகளும் கூரிய உகிர்களும் பகையை முட்டிக் கிழிக்கின்றன. வெகுளிக் கழலை ஒன்றும் உண்டு. குண்டிக்காய்க் கழலை என்று முன்னர் நாம் கூறிய அதுவே வெகுளிக் கழலையாகும். பகைத்துவாழும் விலங்குகளிடம் இக்கழலை அளவிற் பெரிதாக விளங்குகின்றது. குழிமுயல் போன்று அஞ்சிவாழும் உயிருளிகளிடம் இக்கழலை மிகச்சிறிதாகச் சுருங்கிக்கிடக்கின்றது. இந்தக் கழலையில், உண்மையில் இரண்டு கழலைகள் இருக்கின்றன. ஒன்று புறணி; மற்றையது அகணி. புறணியிலிருந்து ஒரு சாறு பாய்கின்றது. உடலுழைப்பினால், குருதியில் புளிப்பம் (acid) மிகுதியாகின்றது. நீர்க்காற்று (Hydrogen) மிகுதியாகின்றது. ஈது ஒரு நஞ்சாகும். குண்டிக்காய்க் கழலைப் புறணிச்சாறு இந்நஞ்சினை அகற்றிக் குருதியைத் தூயதாக்குகின்றது. அகணியிலிருந்தும் ஒருசாறு பாய்கின்றது; அச்சாறு பாய்ந்ததும் தசைநார்கள் எல்லாம் சுறுசுறுப்பாக முறுக்கேறி நிற்கின்றன குருதியீரல் விரைந்து துடிக்கின்றது. நுரையீரலும் விரைந்து மூச்சுவிடுகின்றது. களைப்பு நீங்குகிறது. மண்ணீரல் கல்லீரல் குடல் முதலியவற்றில் இடைபட்டுக் கிடக்கும் குருதி வயிற்றிலிருந்து உடலெங்கும் பாய்கின்றது. உடற்சூடு மிகுதியாகின்றது. மயிர்க்கூச்செறிதலை நாம் காண்கின்றோம். கல்லீரலில் அடங்கிக்கிடக்கும் கன்னற்குழம்பு குருதியிற் பாய்கின்றது, தோல் முழுதும் நெய்ப்பசை யுடையதாகின்றது. குருதியும் விரைந்து கட்டிப்போகும்படியான நிலைமையில் இருக்கின்றது. இவையனைத்தும் குண்டிக்காய்க் கழலை அகணிச்சாற்றின் பயன்கள்.

கன்னற்குழம்பு பாய்வதால், களைப்பின்றி மிகுதியாக உழைத்தல் இயலுவதாகின்றது. களைப்பு நீங்குகின்றது. பகைத்தெழும்போது பயன்படும் இடங்களிற் குருதி பாய்கின்றது. குருதியீரலும் நுரையீரலும் விரைந்துதுடிப்பதால் குருதியோட்டமும், குருதித்தூய்மையு மிகுகின்றன. பகைத்தெழும்போது வேண்டப்படும் ஆற்றல்பெருக்கினைக் குருதியின் பெருக்கமன்றோ உண்டுபண்ணுகின்றது. பகைத்தெழுந்து சண்டையிடுகையில் வெட்டோ அடியோ வீழ்ந்து குருதிக்குழைகள் கிழிந்துபோகலாம். அப்போது குருதி வெள்ளமாக ஓடிவருமன்றோ? அவ்வாறவரின் பகைத்தெழுந்த உயிருளி ஆற்றல்குறைந்து கெடுமன்றோ? அதனைத் தடுப்பதற்கே சினந்தபோது விரைவில் இறுகிக்கொள்ளுந் தன்மை குருதியில் மிகுதியாகின்றது. குருதிக்குழை கிழிந்ததும் அவ்விடத்தில் உடனே குருதி இறுகிப்போதலால் கிழிந்த இடம் அடைபட்டுப் போகின்றது. பகைத்தல் என்ற இயற்கைச்செயனிலைக் கேற்ற உடனிலையை இவ்வகணிச்சாறு உண்டுபண்ணுகின்ற தன்றோ?

ஆற்றலே உயிருளியின் திறத்தை விளக்குவது. இவ்வாற்றல் பொலிவுறாது மங்கிக்கிடந்தால் உயிருளியும் பயனற்றதாய்க் கிடக்கின்றது. அதன் முழுவுருவம் விளங்குவதில்லை. ஆதலினால், ஓர் உயிருளி தன் உயிர்த்திற மிகுந்து விளங்கவேண்டுமானால், வெகுளிக்கு ஆளாகவேண்டும். அன்பிற்சிறந்த அந்தணர்கள் தீயவரிடம் அன்புகாட்டினாலும் தீமையின் மேல் பகைத்தெழுகின்றனர்.

குறுந்தொகை.

[272-வது பக்கத் தொடர்ச்சி]

சேரமானெந்தை] 22 [பாலை

தலைமகனது செலவைக் குறிப்பாலுணர்ந்து ஆற்றாளாகிய தலைவியைத் தோழி, 'காதலர் கருதிய செலவு உன்னைவிட்டுப் பிரிந்துசெல்லுஞ் செலவன்று; உன்னை உடன்கொண்டு செல்லுஞ் செலவு' எனச் சொல்லித் தெருட்டியது.

நீர்வார் கண்ணை நீயிவ ணொழிய
யாரோ பிரிகிற் பவரே? சாரற்
சிலம்பணி கொண்ட வலஞ்சுரி மராஅத்து
வேனி லஞ்சினை கமழுந்
தேமூ ரொண்ணுதல் நின்னொடுஞ் செலவே.

(உரை). நீர்சொரியுங் கண்ணை உடையையாய் நீ இங்கே வருந்திநிற்க உன்னைவிட்டுப் பிரியவல்லார் எவர்? சாரலினிடத்தே மலை தனக்கு (அழகிய) அணியாகக்கொண்ட வலமாகச்சுழலுஞ் சுழிகளைக்கொண்ட மலர்களையுடைய வெண்கடம்பமரத்தினது அழகிய கிளைகள் இளவேனிற் காலத்தில் நறுமணங்கமழும் இனிய இவ்வூர் கருதுவது உன்னை அவர் உடன்கொண்டு செல்லும் செலவையே.

கண்ணை - கண்ணினை, குறிப்புமுற்றெச்சம். மராம் - வெண்கடம்பு. இது வலமாகச் சுழித்த பூக்களை உடையதென்பதை,

கொடுங்கான் மராஅத்துக் குறுஞ்சினை பற்றி
வலஞ்சுரி வாலிணர் கொய்தற்கு (ஐங்குறு, 383)

என்பதாலும், அது இளவேனிற்காலத்துப் பூக்குமியல்பினது என்பதை ஐங்குறுநூற்று, இளவேனிற் பத்தில்,

அவரோ வாரார், தான்வந் தன்றே
வலஞ்சுரி மராஅம் வேய்ந்துநம்
மணங்கமழ் தண்பொழில் மலரும் பொழுதே

என்பதாலும் அறிக.

'ஊர்', ஆகுபெயர். தேம் - இனிமை.

ஔவையார்] 23 [குறிஞ்சி

களவொழுக்கத்தினிடையே வரைவிடைவைத்துப் பொருள்வயிற் பிரிந்த தலைமகனது பிரிவு நீட்டித்தவழி பிரிவாற்றாது உடல்மெலிந்து வாட்டமுற்ற தலைமகளது வேறுபாட்டைக்கண்டு அதன்காரணந் தெரியாது கவன்ற தாயர், கட்டுவிச்சியை அழைத்துக் குறிகேட்டு நின்றபோது, தோழி அறத்தொடுநிற்பாளாய் உண்மையை அவர்களுக்கு உணர்த்துமாறு கட்டுவிச்சியை நோக்கிச் சொல்லியது.

* அகவன் மகளே, அகவன் மகளே,
மனவுக் கோப்பன்ன நன்னெடுங் கூந்தல்
அகவன் மகளே, பாடுக பாட்டே;
இன்னும் பாடுக பாட்டே,
அவர்நன் னெடுங்குன்றம் பாடிய பாட்டே.

(உரை). ஆடிப்பாடுங் கட்டுவிச்சியே, கட்டுவிச்சியே, சங்குமணிக் கோவையைப்போல (நரைத்து வெளுத்த) நல்ல நீண்ட கூந்தலையுடைய கட்டுவிச்சியே, அவரது நல்ல நெடிய குன்றைக்குறித்து நீ பாடிய பாட்டைப் பாடுவாயாக, இன்னுமொருமுறை பாடுவாயாக.

அகவல் - ஆடுதலும் பாடுதலும். மனவு - சங்குமணி. தலைவிக்கு இந்நோயைத் தந்தவன் இவனே, பிறரெவரும் அல்லர் என்பதை அவர்களுக்குணர்த்த, 'அவருடைய குன்றத்தைச் சிறப்பித்துப் பாடிய பாட்டைப் பாடு' என்று கட்டுவிச்சியை நோக்கித் தோழி கூறியது.

பரணர்] 24 [பாலை

பிரிந்த தலைமகன் தான் வரக்குறித்த இளவேனிற் பருவம் வரவும் அவன்வரக் காணாது ஆற்றாளாகி வருந்திய கிழவி தோழிக்குக் கூறியது.

கருங்கால் வேம்பி னொண்பூ யாணர்
என்னை யின்றியுங் கழிவது கொல்லோ ;
ஆற்றய லெழுந்த வெண்கோட் டதவத்
தெழுகளிறு மிதித்த வொருபழம் போலச்
சிதைய வெமைநீத் தகன்ற
நாம்வெங் காதலர் நல்கார் கொல்லோ.

(உரை). பெரிய காலையுடைய வேம்பினது ஒள்ளிய பூக்களின் புதுவருவாயை உடைய இளவேனிற்காலம், எனது தலைவனை (நான் கூடல்) இன்றியே கழிந்திடுமோ? ஆற்றங்கரையில் வளர்ந்தோங்கிய வெள்ளிய கிளைகளையுடைய அத்திமரத்தினின் றுதிர்ந்து, ஆற்றில் நீராடியெழுந்த ஆண்யானை காலால் மிதித்துச் சிதைத்த, பழமொன்றைப் போல எம்மை நலனழித்து நீக்கிப்பிரிந்தவராகிய நாம் விரும்புங் காதலர் (இப்பருவ வரவுணர்ந்து மீண்டுவந்து) நம்மை அருளாரோ?

யாணர் - புதுவருவாய்; ஈண்டு, (ஆகு பெயர்) அப்புதுவருவாயையுடைய இளவேனிற்பருவம். என்னை, என் ஐ, எனது தலைவன். அதவம் - அத்திமரம்.

'தாம் பிரிந்து சென்றபோது திரும்பிவருவதாகக் குறித்த இளவேனிற் பருவம் வந்தும், தாம் இன்னும் வந்திலர்; ஆதலின் அவரில்லாமல் தமியளாகியே நான் இப்பொழுதைக் கழிக்கக் கடவேனோ' என்று தலைமகள் வருந்தியவாறும்.

சீர்குலைந்து காணப்பட்ட ஈற்றடி களிரண்டும் இவ்வாறு ஒருவாறாகித் திருத்தப்பெற்றுள்ளன.

கபிலர்] 25 [குறிஞ்சி

விரைந்துவந்து வரைந்துகொள்வலெனச் சூளுற்றுச் சென்ற தலைமகனது பிரிவு நீட்டித்தவிடத்துத் தலைமகள் தன்றோழியுடன் புலந்து கூறியது.

யாரு மில்லை, தானே கள்வன்;
தானது பொய்ப்பின் யானெவன் செய்கோ?
தினைத்தா ளன்ன சிறுபசுங் காஅல
ஒழுகுநீ ராரல் பார்க்குங்
குருகு முண்டுதா மணந்த ஞான்றே.

(உரை). தலைமகன் கள்வனைப்போல வந்து என்னுடன் கூடிச்சென்றகாலை பிறரெவரும் அங்கில்லை. அத்தகையான் (தன் சூளிற்) பொய்ப்பானாயின் யான் செய்யத்தக்கதென்? இடையறாதொழுகும் நீரிலுள்ள தினைத்தாளைப்போன்ற சிறிய பசிய கால்களையுடைய ஆரல்மீனை (கௌவியுண்ண) பார்த்திருந்த நாரையொன்றுமே என்னை அவன் அவ்வாறு கூடியபொழுது அங்கிருந்தது.

'யாருமில்லை' என்றவள் பின்பு 'குருகுமுண்டு' என்றது, அதுதான் ஆரலையுண்ணுங் கருத்தோடிருந்தமையின் இதனை ஒருகால் அறியாதிருத்தல்கூடும்; அறிந்திருப்பினும் பிறவுயிர்க்குத் தீங்கிழைப்பதையே தொழிலாக்கொண்ட அது தனக்குப் பரிந்து கரிகூற முன்வாராதிருத்தல்கூடும் என்பது கருதி. தாம் - சாரியை.

வெள்ளிவீதியார்] 26 [குறிஞ்சி

இதுவும் அது

அரும்பற மலர்ந்த கருங்கால் வேங்கை
மேக்கெழு பெருஞ்சினை யிருந்த தோகை
பூக்கொய் மகளிரிற் றோன்று நாடன்
தகாஅன் போலத் தான்றீது மொழியினும்,
தன்கண் கண்டது பொய்க்குவ தன்றே;
தேக்கொக் கருந்து முள்ளெயிற்றுத் துவர்வாய்
வரையாடு வன்பறழ்த் தந்தைக்
கடுவனு மறியுமக் கொடியோ னையே.

(உரை). அரும்பின்றி முற்றுமலர்ந்த கரிய காலையுடைய வேங்கைமரத்தினது மேனோக்கியெழுந்த பெரிய கிளையினிடத்தே தங்கியமயில் பூக்கொய்யலுற்ற மகளிரைப் போலத்தோன்றும் மலைநாட்டுத் தலைவன், ஒழுக்கமற்ற கீழ்மகனைப்போலத் தீங்குவிளைப்பதாகிய பொய்மொழியைக் கூறினும், அவனது களவொழுக்கத்தைக் கண்ணிற் கண்ட

றிந்தவர் தாம் பொய்க்கரிகூறுவது அறமன்று; இனிய மாங்கனியை உண்ணுங் கூறிய பற்கள்பொருந்திய செவந்த வாயையுடையதாய் மலையினிடத்து விளையாடும் வலிய குட்டிக்குத் தந்தையான ஆண்குரங்கும் அக்கொடியவனை (யும் அவன் எனக்கிழைத்த வஞ்சகத்தையும்) அறியும்.

தகான் - தகுதி, நற்குணம், அற்றவன். தீது - பொய். கண் கண்டது - கண்ணால் நேரே பார்த்தது. பொய்க்குவது - பொய்யெனக்கரிபகர்வது (சாட்சிசொல்வது). தேக் கொக்கு - தேன் கொக்கு; கொக்கு - மாமரம்; இங்கே மாம்பழம். பறழ் - (குரங்குக்) குட்டி. துவர் - செந்நிறம். கடுவன் - ஆண்குரங்கு.

இறைச்சி:— வேங்கைமரத்தின் மேலிருந்த மயில் பூக்கொய் மகளிரைப்போலத் தோன்றும் என்ற குறிப்பால், தலைமகன் மனத்தால் நன்மைபுரியானாயினும் வெளித்தோற்றத்தால் நல்லது செய்வான்போலக் காணப்படுகின்றான் என்றவாறாம்.

கொல்லன்,அழிசி] 27 [பாலை

தலைமகனது பிரிவிடைத் தலைமகளது ஆற்றாமையைக் கண்டு கவன்ற தோழிக்குக் கிழத்தி சொல்லியது.

கன்று முண்ணாது, கலத்தினும் படாது
நல்லான் றீம்பா னிலத்துக் காஅங்
கெனக்கு மாகா தென்னைக்கு முதவாது
பசலை யுணீஇய வேண்டும்
திதலை யாகத்தென் மாமைக் கவினே.

(உரை.) கன்றும் உண்ணாது கலத்தினுங் கொள்ளப் பெறாது நல்ல பசுவின் இனிய பால் தரையிலே கொட்டப் பட்டாற்போல, சுணங்குபரந்த மார்பினையுடைய எனது நல்ல நிறத்தோடுகூடிய அழகு எனக்கும் பயன்படாமல் எனது தலைவனுக்கும் உபயோகப்படாமல் பசலையாலேயே உண்ணப்படவேண்டும் போலும்.

கலம் - பாத்திரம். என்னை - என் ஐ, எனது தலைவன். பசலையுண்ணல் - பசலையால் மூடப்படுதல். மாமை - அழகிய நிறம்.

ஔவையார்] 28 [பாலை

இதுவும் அது

முட்டு வேன்கொல், தாக்கு வேன்கொல்;
ஓரேன் யானும்; ஓர்பெற்றி மேலிட்
டாஅ வொல்லெனக் கூவு வேன்கொல்;
அலமர லசைவளி யலைப்பவென்
உயவுநோ யறியாது துஞ்சு மூர்க்கே.

(உரை.) என் தலையை மோதிக்கொள்வேனோ? பிறரைத் தாக்குவேனோ? அல்லது, யாதானுமொன்றை வியாஜமாகக்கொண்டு உரக்கக் கூவுவேனோ? சுழன்றடிக்கும் காற்று அலைத்தலால் வருந்தும் எனது (காம) நோயை அறியாது (இனிது) துயிலும் இவ்வூராரைக் குறித்து, அந்தோ, இன்னது செய்வதென்று யானோ அறியேன்.

முட்டுதல் - மோதிக் கொள்ளுதல். பெற்றி - காரணம், வியாஜம். ஆ - இரக்கக்குறிப்பு. துஞ்சுதல் - துயிலுதல்.

ஔவையார்] 29 [குறிஞ்சி

இரவுக்குறி மறுக்கப்பட்ட தலைமகன், உடனே வரைந்து கொள்ளுதற்கு உடன்படாது பின்னும் களவொழுக்கத்தையே விரும்பி மேற்கொண்டு நின்ற தன் மனத்துடன் கூறியது.

நல்லுரை யிகந்து புல்லுரைத் தாஅய்,
பெயனீர்க் கேற்ற பசுங்கலம் போல
உள்ளந் தாங்கா வெள்ள நீந்தி
அரிதயர் வுற்றனை, நெஞ்சே; நன்றும்
பெரிதா லம்ம,நின் பூசல்; உயர்கோட்டு
மகவுடை மந்தி போல
அகனுறத் தழீஇக் கேட்குநர்ப் பெறினே.

(உரை.) நல்ல சொற்களை விட்டுப் புல்லிய சொற்களிற் படர்ந்து, மழைநீரினெதிரே வைக்கப்பட்ட பச்சைமட்கலத்தைப்போல, உள்ளம் தாங்கமாட்டாத துயர்க்கடலினகப் பட்டுத் தத்தளித்து, நெஞ்சழிந்து அரியதான வருத்தத்தை உற்றனை; என் நெஞ்சே, கேட்பாயாக; உனது ஆரவாரம் மிகவும் பெரிதாக இருக்கின்றது. உயர்ந்த மரக்கொம்பின் மேல் குட்டியைத் தூக்கிச்செல்லும் தாய்க்குரங்கைப் போல உன்னை அகம்பொருந்தத் தழுவிக்கொண்டு (உன் குறையைக்) கேட்பாரைப் பெற்றாய் (உனது துயர் சிறிது ஆறும்; அதுவும் இல்லையே; இனிச் செய்யத்தக்கதென்?)

தாஅய் - தாய், தாவி(ப்படர்ந்து). பெயல்- மழை. ஏற்ற - எதிருற்ற. பசுங்கலம் - சுடாத பச்சை மட்கலம். நன்று - பெரிது; நன்றும்பெரிது - மிகப்பெரிது என்றபடி. கேட்குநர்ப்பெறினே - தமது குறையைத் தீர்ப்பாரைப் பெறாவிடினும் கேட்பாரையேனும் பெற்றால் துயரம் ஒருவாறு குறையும்; அதனையும் பெற்றிலை நீ; வீணேவருந்திப் புலம்புவதில் பயனென்னை, என்றவாறாம். பூசல் - தான் எவ்வளவு சமாதானப் படுத்தியும் அமையாது பின்னும் அவளிடத்துச் சென்று குறையிரக்குமாறு தன்னைத் தன்மனம் தூண்டுதல்.

கச்சிப்பேட்டு நன்னாகையார்] 30 [பாலை

"தலைமகன் வரைவிற்குப் பொருள்குறித்துப் பிரிந்தானென அறிந்துவைத்தும் ஆற்றாது நீ இவ்வாறு வருந்துவது என்னை" என்ற தோழிக்குத் தலைவி சொல்லியது.

கேட்டிசின், வாழி தோழி, அல்கற்
பொய்வ லாளன் மெய்யுற மரீஇ
வாய்த்தகைப் பொய்க்கன மருட்ட வேற்றெழுந்
தமளி தைவந் தனனே; குவளை
வண்டுபடு மலரிற் சாஅய்த்
தமியேன், மன்ற வளியேன் யானே.

(உரை.) கேட்பாயாக தோழி; இரவின்கண் வஞ்சகச் செய்கையில் வல்லவனான தலைமகன் (என்னை) மெய் பொருந்தத் தழுவியதாக மெய்போன்றதோர் பொய்க்கனவு என்னை மயக்க, அதனை உண்மையெனக் கொண்டு எழுந்து நான் படுக்கையைத் தடவினேன்; குவளைபோன்ற எனது கண்கள் வண்டுவீழ்ந்த மலரைப்போல அழகுகெட்டுத் தனியேனாக இருப்பக்கண்டேன்; ஆதலால், உண்மையாக அளிக்கப்படத்தக்கவளே யான்.

அல்கல் - இரவு. வாய்த் தகை - மெய்யாகியதன்மை; வாய் - மெய், உண்மை. சாஅய்-அழகுகெட்டு. தமியேன் - தமியேனாயினேன். குவளை -(ஆகுபெயர்)கண்.

ஆதிமந்தியார்] 31 [மருதம்

தலைமகனுக்குந் தனக்கும் உளதாய களவுக்கூட்டத்தை அறியாது தன் தமர் அயலானொருவனுக்குத் தன்னை மணஞ்செய்து கொடுத்தற்கு மனமிணங்கி நின்றகாலை, அதனைத் தடுக்குமாற்றான் தோழி செவிலிக்கு அறத்தொடுநிற்கும் பொருட்டுஅவளுக்குத்தலைமகள் உண்மையையுணர்த்தியது.

மள்ளர் குழீஇய விழவி னானும்,
மகளிர் தழீஇய துணங்கை யானும்,
யாண்டுங் காணேன், மாண்டக் கோனை;
யானுமோ ராடுகள மகளே; யென்கைக்

கோடீ ரிலங்குவளை நெகிழ்த்த
பீடுகெழு குரிசிலுமோ ராடுகள மகனே.

(உரை.) வீரர்கள் கூடிய (ஆயுத) விழாவிடங்களிலும், மகளிர் பலர்சேர்ந்து ஆடும் துணங்கையாட்டிடங்களிலும், வேறு எல்லாவிடங்களிலும் (தேடியும்) பெருந்தகையைக் கண்டிலேன். (இவ்வாறு பலவிடங்களிலும் அவனைத் தேடித்திரிந்தமையால்) யானுமோர் ஆடுகளத்து மகளே போல்வேன்; என் கையிலணிந்த சங்கையறுத்துச்செய்த விளங்கும் வளைகளைக் கழன்று விழும்படி செய்த பெருமைவாய்ந்த குரிசிலுமோர் ஆடுகளத்து மகனேபோல்வான்.

மள்ளர் விழவு-வீரர் தமது படைக்கலவல்லமையைப் பலரும்பார்த்து மகிழ்வதற்கு எடுத்தவிழா. துணங்கை-இருகைகளையுமடக்கி விலாப்புறத்தடித்துக்கொண்டு மகளிர் பலர் கூடியாடும் ஒருவகைக்கூத்து. விழவு, துணங்கை - ஆகுபெயர்கள். ஆடுகளம் - கூத்தர் ஆடுங்களம். மாண்தக்கோன் - பெருந்தகை. கோடு - சங்கு. குரிசில் - ஆடவரிற் சிறந்தவன்.

'யாண்டுங்காணேன் மாண்டக்கோனை'; 'யானுமோர் ஆடுகள மகளே;' 'குரிசிலுமோர் ஆடுகள மகனே' என்றமையால் தம்மிருவரது கூட்டுறவைத் தோழிக்குணர்த்தி அவளைச் செவிலிக்கு அறத்தொடுநிற்பித்தவாறு காண்க.

நம்மாழ்வார் வைபவம்.

திருவாய்மொழி.

18/9/60.

[289-வது பக்கத் தொடர்ச்சி]

முதல் பத்து மூன்றும் பதிகம்.

மூன்றும் பாசுரம்:—

அமைவுடை யறநெறி முழுவது முயர்வற வுயர்ந்து
அமைவுடைமுதல்கெடலொடி விடையற நிலமதுவாம்
அமைவுடை யமரரும் யாவையும் யாவரும் தானும்
அமைவுடை நாரணன் மாயை யறிபவர் யாரே.

பதவுரை.

அமைவுடை - பூர்த்தியையுடைய, அறநெறி முழுவதும் - தர்மமார்க்க மெல்லாவற்றாலும், உயர்வற - மற்றப் பொருள்களுக்கு உயர்வுஅறும்படி, உயர்ந்த - பெரிதான, அமைவுடை - பூர்த்தியுடையவைகளான, அதாவது பாரபேக்ஷை இல்லாமல் தங்களுக்குத் தாமே நிறைவுடைய, முதல் - சிருஷ்டி, கெடல் - ஸம்ஹாரம், இடைஒடிவு - நடுவிலே ஸம்பவிக்கும் கெடுதி, அது - அந்த சிருஷ்டியாதிகளெல்லாம், அற - முழுவதும், நிலமாம் - குடிகொண்டிருக்கிற, அமைவுடை - பூர்த்தியை யுடையவர்களான - அதாவது தம்தம் தொழில்களிலேயே திருப்தி அடைகிற, அமரரும் - தேவதைகளும், - அதாவது சிருஷ்டி செய்யும் பிரம்மனும் ஸம்ஹாரம் செய்யும் ருத்திரரும், யாவையும் - எல்லா அசேதநங்களும், யாவரும் - எல்லாச் சேதநர்களும், தானும் - எல்லாம் இவையே யாயிருக்கிற, அமைவுடை - பூர்த்தியுடையவரான, நாரணன் மாயை-நாராயணனுடைய ஆச்சரியசக்தியை,யார் அறிவார்-ஒருவரும் அறியமாட்டார்.

குறிப்பு:மேல்பாட்டில் ஸகலவிபவத்துடன் பகவான் அவதாரவிசேஷங்களில் ஜந்மம் எடுக்கிறானென்றும் மனுஷனாக அவதாரம் எடுக்கும்போது ஸர்வ சுலபனாய் ஸஜாதியர் தன்னை ஆசரியிக்கும்படி நிற்கிறானென்றும் சொன்னதை அநுபவிக்கையில் பிரம்மருத்திரர்களுக்குப் பூர்ணாதிகாரமும் ஜகத்து ஐசுவரியமும் கொடுத்து அவர்களுக்கு நிர்வாஹகனாக யிருப்பானொருவனான நாராயணன், எல்லாச் சேதந அசேதந வஸ்துக்களுக்கும் ஆத்மாவாயிருக்கிற ஆச்சரியத்தை வியந்து, திரும்பியும், அவனுடைய சர்வோத்கிருஷ்டமான ஏற்றத்தையும் அவதாரங்களில் அவன் தாழ்ந்து இடையர்கள்போலத் தாழ்ந்தவர்களுக்குங் கூட ஸர்வசுலபனாய் நடிக்கும் ஆதரத்தையும் விசாரிக்கிறாரென்ற ஸங்கதி ஸூசிதை.

இடை ஒடிவு:—பிரம்மன் தின முடிவில் நடக்கும் பிரளயங்களில் பிராணிகளின் முடிவு - அதாவது நடுவில் வரும் அவாந்தர ஸம்ஹாரம் - இது நியதியாய் ஏற்பட்ட பிரளயங்களில் அகப்படாதது.

நான்காம் பாசுரம்:—

யாரும்ஓர் நிலைமையனென அறிவரிய எம்பெருமான்
யாரும் ஓர்நிலைமையனென அறிவெளியஎம்பெருமான்
பேரும் ஓராயிரம் பிறபலவுடைய எம்பெருமான்
பேரும் ஓருருவமும் உள்தில்லை யிலதில்லைபிணக்கே.

பொழிப்புரை:—எத்தனைப்பெரியோரானாலும் அவனிடத்தில் பற்றில்லாதவர்களுக்கு அவர் அறியமாட்டாமையாலே இந்நிலைமை யுடையவனென்று கூறக் கூடியவனல்லன். அவனிடம் அன்புவாய்ந்தவர்களுக்கு அவர் எவ்வளவு தாழ்ந்தவரானாலும் இந்தநிலையை யுடையவனென்று அறிந்துகூறச் சுலபமானவன். இப்பற்றுடையவர்கள், அளவில்லாக் கல்யாணகுணங்களுடையவனென்றும் ஆசிரதர்களைக் காப்பாற்றுவதற்காகத் திவ்ய ரூபங்களெடுத்து அவர்கள் அறியும்படி விளங்குகின்றவனென்றும் அறிவார்கள். ஆயிரம் பேர்களும் ஆயிரக்கணக்கான ரூபங்களும் பற்றுள்ளவர்களுக்குத் தோற்றுகையில் அநாசிரதர்களுக்குத்தோற்றாமலிருப்பதாலே ஒருபகுதியார் எம்பெருமான் குணங்கள் உருவங்கள் இன்ன வகை என்ன, மற்றொருபகுதியார் அவனுக்கு அக்குணங்கள் உருவங்கள் இல்லை என்ன, இவ்வண்ணம் அவன் இருக்கிறான்.

குறிப்பு:—இது முதல்பாட்டிற்கு விவரணமென்று படிப்பவர்கள் அறிவார்கள். பிணக்கு - வாக்குவாதம், விவாதம். "பிறபல" என்கிற தொடரிற்குப் பின் வரும் "உருவம்" என்கிற பதத்தோடு அந்வயம்.

ஐந்தாம் பாசுரம்.

பிணக்கற வறுவகைச் சமயமும்நெறியுள்ளி யுரைத்த
கணக்கறு நலத்தன னந்தமி லாதியம்பகவன்
வணக்குடைத்தவ நெறிவழி நின்றுபுற நெறிகளைகட்டு
உணக்குமின் பசையற வவனுடை யுணர்வுகொண்
[டுணர்ந்தே

அவதாரிகை:—முன்பாட்டில் எம்பெருமானிடத்தில் பக்தியுள்ளவர்கள் சிலருக்கு அவன் அறியச் சுலபனென்றும் பற்றில்லாத பலருக்கு அவன் அறியமுடி

யாதவனென்றும் கூறியதை, முதல்பகுதியார் வேத வாதிகளென்றும் இரண்டாவதுபகுதியார் வேத விலக்கான ஆறுமதக்காரர்களென்றும் விவரித்துப் பக்தியோகம் செய்யச் சூழ்ச்சியும் கற்பிக்கிறார்.

பதவுரை.

அறுவகைச் சமயமும் - வேதமதத்திற்கு வெளியான ஷட்சமயத்தாருக்கும் வேதத்தையே கைகொள்ளுகிற வைதீகர்களுக்கும், பிணக்கு அற - கலகம் நீங்கும்படி, நெறி - தர்மமார்க்கத்தை, உள்ளி - விசாரித்து, உரைத்த - கிருபையால் அருளிச்செய்தவனை, கணக்கறு - அளவுக்ககப்படாத, நலமுடையவன் - கல்யாண குணங்களையுடையவன், அந்தமில்- முடிவில்லாத, ஆதி-ஜகத்காரணமான, அம்-அழகான, பகவன்-ஷட்குண பரிபூரணனிடத்தில், வணக்குடை- தொழுது நமஸ்காரம் செய்யும் வணக்கத்தை யுடைத்தான, தவநெறி-தபசாகிற வழியை-அதாவது மோக்ஷோபாயத்தை, வழிநின்று - வழிப்பட்டு, புறநெறி - மற்ற லௌகிகமரபுகளை, களைகட்டு-களையெடுத்து, அவனுடைய வுணர்வுகொண்டு- அவனை அறியச் சாதனமான ஸ்ரீ பகவத்கீதையைக்கொண்டு, உணர்ந்து - நன்றாக அறிந்து, அதாவது அவனிடத்தில் பற்று வைத்து ஒட்டி, பசை - உலோக விஷயத்தில் ஆசையை, அற - முழுவதும் நசிக்கும்படி, உணக்குமின் - உலர்த்திவிடுங்கள், அதாவது விட்டுவிடுங்கோள்.

கருத்துரை:—முற்பாட்டில் சொன்ன விவாதத்தால் மனம் கலங்குகிறவர்களுக்கு வேதத்தால் படிக்கப்படுகிற எம்பெருமான் தானே பகவத்கீதையில் ஷாட்குண பரிபூர்ணனாய் நின்று வேதபாஹ்ய மதங்களை நிரஸித்து வைதீகமதமே உண்மையென்று ஸ்தாபிக்கிறான். நீங்கள் அந்தச் சாஸ்திரத்தால் தெளிந்து அவன் கற்பிக்கும் பக்தியோகமாகிற மோக்ஷோபாயத்தில் இறங்குங்கள். அவனிடத்தில் பக்தி வைத்தால் இதர உலோக விஷயங்களை விட்டுவிடுவதற்குச் சுலபமாகுமென்று கற்பிக்கிறார்.

பக்வத்கீதையின் இறுதிச் சுலோகத்திற்கு முன் சுலோகத்தில் "மன்மனாபவ மத்பக்தௌ மதயாஜி மாம் நமஸ்குரு" என்றதை ஞாபகத்தில் வைத்துக் கூறுகின்றார்.

ஆறாம் பாசுரம்

உணர்ந்துணர்ந் திழிந்தகன்
றுயர்ந்துருவி யந்தஇந்நிலைமை
உணர்ந்துணர்ந் துணரிலு
மிறைநிலையுணர் வரிதுயிர்காள்
உணர்ந்துணர்ந் துரைத்துரைத்
தரியயனா னென்னுமிவரை
உணர்ந்துணர்ந் துரைத்துரைத்
திறைஞ்சுமின் மனப்பட்டதொன்றே

அவதாரிகை:—முன்னரே யோகாப்பியசத்தால் பிருகிருதிவிடுபட்ட பரிசுத்தாத்ம சுவரூபத்தைக் காண்பது அரிது என்று சொன்னார். இதினருமை இந்தரியஜயம் கைவாராமைபற்றி என்று முன்பே கூறியாய் விட்டது. இப்பாட்டில், இதிலும் அருமை, அடைக்கலம் புகவேண்டிய தெய்வம் ஹரியோ - ஹரனோ - சதுர்முக பிரம்மனோ, என்று தேறுவது என்கிறார்.

பதவுரை.

உயிர்காள் - மானிடர்களே, உணர்ந்து-உணர்ந்து, (நீங்கள்) அந்த அந்த வஸ்துக்களை அறிந்து அறிந்து கொண்டு, இழிந்து - தாழ்ந்த தேசத்திலே மனவுணர்ச்சியால் வியாபித்து, அகன்று - மன உணர்ச்சியால் சமதளத்தில் இங்குமங்கும் நிறைய வியாபித்து, உயர்ந்து-மேல் பிரதேசத்திலே அம்மன உணர்ச்சியால் வியாபித்து, உரு - ரூபமாய்க்கிடக்கும் வஸ்துக்களில் காட்டிலிலும், வியந்த - விலக்ஷணமான, அதாவது ஆச்சரியமாய் வேறுபட்ட, இந்நிலைமை - இந்த ஆத்மாவினுடைய ஸ்திதியை, உணர்ந்து - கேள்வியாலறிய முயன்று, உணர்ந்து - மனதாலே தெளிந்து, உணரிலும் - ஒருவாறு யோகத்தாலே சாக்ஷாத்கரித்தாலும், இறைநிலை -ஈசனுடைய சுபாவம்,உணர்வரிது -தெரிவது முடியாது. அரியயன் அரனுமிவரை- ஹரி, அஜன் ஹரன் என்கிற இவர்களை, உரைத்துரைத்து பலதடவைகளில் தெரிந்து சாஸ்திரக்குறிப்புகளால் ஆலோசனை செய்து, மனப்பட்டதொன்றே - உங்களெல்லாருக்கும் ஈசனாகத் தோன்றும் ஒருவரை, உணர்ந்துணர்ந்து - அவர்கள் உருவம் விக்ரகம் முதலியவற்றை அவருக்கேற்கும் மந்திரஜபங்களாலே ஞாபகத்தில் நிலைநிறுத்தி, இறைஞ்சுமின் - இறையாக அடைக்கலம்புக ஈசனாரைத் தொழுங்கள்.

ஏழாம் பாசுரம்.

ஒன்றெனப் பலவென வறிவரும் வடிவினுள் நின்ற
நன்றெழில் நாரணன்நான் முகனரனென்னு மிவரை
ஒன்றநும்மனத்தில் வைத்துள்ளினுமிருபசையறுத்து
நன்றெனநலஞ்செய்வது அவனிடை நம்முடைநாளே

பொழிப்புரை:—இந்த ஜகத்தையெல்லாம் நடத்தி ஆளும் ஈசன் ஒருவனா பலரோ, ஹரியோ, ஹரனோ, சதுர்முக பிரம்மனோ என்று அறிய அரிதான நிலைமையிலேநின்ற இப்பரம தெய்வங்களைக் கேள்வி சாஸ்திர விசாரங்கள் இவைகளால் ஊக்கத்துடன் மனசாலே அடிக்கடி உன்னினால் ஒருவனே பரதேவதை என்று தோற்றும். அவன் ஸர்வ கல்யாண குணங்களையுடைய நாராயணனே என்று தெரியவரும். இவ்விதம் தோற்றும் சமயத்தில் ஏனைய தெய்வங்களிடத்தில் ஈசனே என்ற சங்கையைப் பரிஹரித்துக்கொண்டு அந்த நாராயணனிடத்திலேயே ஒருசில்லரைப் பிரயோஜனத்திற்கும் ஆசைப்படாமல் சரீரம் மனம் வாக்கு திருடமாயிருக்கையிலேயே அடிமைப்புகுங்கோள் என்கிறார்.

குறிப்பு:—இது, முன்பாட்டில் மும்மூர்த்திகளில் ஒருவன் பரம்பொருளென்றும், ஈசன் என்றும் தோற்றிவருமென்றும் ஆனால் அது யாரென்று குறிப்பிடாமலும் திருவாய் மலர்ந்தருளினர். இந்தப் பாட்டில் அவன் திவ்விய ஸௌந்தரியமும் திவ்விய குணங்களுமுள்ள நாராயணனென்று குறிப்பிட்டு அவனைச் சுவயம்பிரயோஜனமாக ஈசனாக வழிப்பட்டுப் பக்தி செய்யுங்கோள் என்கிறார்.

கருத்து:—ஆகவே இந்த இரண்டுபாட்டாலும் மஹாபாரதத்தில் வியாஸபகவான் திரட்டி எடுத்த சாஸ்திரார்த்தத்தை அநுசரித்துத் திருவாய்மலர்ந்தருளுகிறார். "ஆலோட்டிய ஸர்வசாஸ்திராணி, விசார்ய ஸவிய புனப்புன: இதம் ஏகம் ஸுநிஷ்பன்னம் தேயோ நாராயண ஸதா" [எல்லாச் சாஸ்திரங்களையும் கலக்கி கலக்கி ஆராயுங்கோள்; திரும்பியும் திரும்பியும் பரியாலோசனை செய்யுங்கோள்; ஒரு தத்துவந்தான் திரண்டு கைவரும். அதாவது, எப்பொழுதும் நாராயணனைப் பக்திகொண்டு தியானம் செய்யவேண்டுமென்பது] இப்பாசுரங்களின் பதங்கள் மேல்சுலோகத்தை எவ்வாறு ஒத்து அநுசரித்திருக்கிற தென்று படிப்பவர்கள் அறிவார்கள்.

இலஞ்சிப் பாவை.

[295-வது பக்கத்தொடர்ச்சி]

12. காதலியம்பல்.

இவ்வளவிற் செல்லுங்கொ லிவ்வளவிற் காணுங்கொல்
இவ்வளவிற் காத லியம்புங்கொல் — நளவெண்பா.

ஆலாலன் பாடிய பாட்டினைக் காதுகொடுத்துக் கேட்பவள்போல்சுதஞ்சனை தோன்றினாளேனும், அவளது எண்ணங்கள் அப்பாட்டைவிட்டகலவோடின. மாயப்பேய் இப்பாட்டினிடை தம்பியா யிங்கு மாறுமளவில், அங்கோ ருருவம் செங்குத்தான பாதையைக் கடந்துவந்தது. அடலுறு உடலும், நிலமிசையழுந்தாதெழுந்துசெல் நடையும், அருள்புரள் முகமும், சீரிய நோக்குடைக் கூரியகண்களும், பச்சைமா மேனியோவெனும்படி போர்த்ததோர் பசிய ஆடையும், பண்டேயறிந்துள வொரு வடிவினைச் சுதஞ்சனைக் குணர்த்தின. தூரத்தில் தோன்றியவவ் வீரவுருவம் விரைந்து வந் தயலனுகலும், கனவிடைக் காணல்போல் விஜயனைக்கண்டிவ் வஞ்சியனையாள் மிகவஞ்சித் தன்வாயுள் துடித்த கூக்குரலை வன்மையுட னடக்கி, "ஐய, அச்சஞ்சூழ் இவ் அகலுள் உம்மை யடித்துவருமொரு துயரக்காற்று யாது" என்றனள்.

'உன்னைக் காணக் கொண்டுவருங் காற்றுந் துயரக்காற்றாமோ? முன்னென்னை மலைநாட்டிற்கு வெளியே கொண்டுசெலுத்திய அவ் வழிகாட்டியே, இன்றுகாலையென்னைச் சொற்படிகண்டு மலையோரமும் ஆற்றோரமும் மகிழ்வுடன் நடத்தி உன்னருகே கொணர்ந்துவிட்டான்.''

''மகிழ்வுடனா! ஆருக்கு மகிழ்வு? போர்மூண்டிருப்பதையும், படைகள் கைகலக்க நெருங்கியிருப்பதையும், ஒவ்வொரு சிறுவழியும் ஒப்பின்றிக் காக்கப்பட்டிருப்பதையும் அந்த வழிகாட்டி உமக்குச் சொல்லவில்லையோ?

" இல்லை. ஒன்றும் சொல்லவில்லை. அவ்வகையான அறிகுறிகளை நான் காணவும் இல்லை''

" இதில் ஏதோ வஞ்சனை யுளது! ஓ, இதற்கென்ன செய்வது? ஆலாலரே நீர், விரைவிற் சென்று, அதோ மலைச்செறிவில் தலைப்பாகை தெரியநிற்கும் ஆடவன் தகுதியுள்ளவனா வென்றும், இப்பெருமகனை மறுபடியும் அழைத்துச்செல்ல ஏற்றவனாவென்றும், சங்கையின்றி நம்பத்தகுந்தவனாவென்றும் தெளிந்து, அவன் இவரைச் செவ்விதின் கொண்டுபோய்ச் சேர்க்கும்படி ஆணை வாங்கும். ஐயகோ, என்னிலும் புன்விதி மிக்க ஏழையீர், எதற்காக இவ்விடம் இவ்வேளை வந்தீர்? இராதாகிருஷ்ணனது தாயத்தைச் சேர்ந்தவனெவனும், அவன் எவ்வளவுதான் வறுமையாளனாயிருப்பினும், குபேரசெல்வமே கிடைப்பதாயினும், உத்தரகுருவின்கண் அவனை வைப்பதாயினும்,பொன்னிற்குவிழைந்தேனும், அன்பிற் குள்ளாகியேனும், அச்சத்திற் கடங்கியேனும், தன்னுடைய தலைவனறியாது உம்மை யிந்நாட்டிற்குக் கொண்டுவந்திரானே! இது என்ன புதுமை! என்னை யண்டினாருக்கும் எனது துன்பம் மண்டுவதோ? ''

"அன்புடைய நங்காய்! உன் கவலைக்கு இலக்காய போது, என்னுடலம் சிறந்ததென்றே நான் கொள்ளல் வேண்டும். ஆயினும், மானத்தைக் காத்தற்பொருட்டோ, காதலி னளவைக் காட்டற் பொருட்டோ எனக்கு மரணம் நேர்வதென்றால் அம் மரணத்தை நான் ஒருபொருள் படுத்துவேனோ? எனின், எனக்குக் கிடைத்துள இவ்வமயத்தை வீண்போக்காது நான் எண்ணிவந்ததை எடுத்துச்சொல்ல விடைதருவாய். வனத்தினில் இதுவரை அலர்ந்திரா நன்மலராகிய உன்னைப் பரிவுடன் யான், எவ்விதத்திலும் உனக்கு ஏற்காத இவ்வடவியின் கொடுமையினின்றும் கொண்டுபோக இவ்விடம் வந்தேன். நாட்டின்கண், நறுமணம்வீசும் பல்வகை நன்மலர்களுடைய என் நந்தவனத்திடையே, சுற்றத்தார் புடைசூழ நாரியர் பலர் பணிவிடைசெய்ய, என் இல்லக்கிழத்தியா யமர்தற் கிணங்குவாயேல், நான் பிறந்த பயன் பெற்றவனாவேன் வனத்துறை யணங்கெனும் வனப்பு வாய்ந்தோய்! அச்சமுறுத்து மிவ் வடவியை விடுத்தும், அமரே தொழிலாயமர்ந்த மூர்க்கரது தொடர்பை யொழித்தும், உன் நளினமலர்க் கரங்களைத் தொட்டழைத்துப் போகுமோருரிமையை எனக்கு நல்குவாயேல், பெறும் பேறு பெற்றவனாய் நானும், உன்தாய் தந்தையரது விடைபெற்று மகிழ்வுடன் இன்றே யென தூரிற் குன்னை யுடனழைத் தேகுவேன். சற்றே தூரத்தில் உனக்காகக் குதிரைகள் காத்திருக்கின்றன. உன்னை நான் அன்பாற் சூழ்வித்து, அளியால் பிணிப்பித்து, தூயதோர் கோயிலில் வைத்துப் பூஜை—

"ஐயா! உமது நல்லெண்ணத்தை நான் அறியாமலில்லை. அங்ஙனம் அறியேன் என்று சொல்வேனேல் அது வஞ்சியர்க்குரிய வஞ்சகமாம். உம்மோடன்று யான் மங்கையர்க் கியைந்த காவலைக்கடந்து அளவளாவிப் பேசியது என் பிழை. ஆற்றுவெள்ளத்தில் நிலைகாணாது புரண்டுருளும் ஒருத்தியைப்போல உமது மொழியெனுஞ் சுழியுளேபட்டுப் புகழ்ச்சி பொதிந்த உமது வார்த்தைப்பெருக்கினின்றுந் தப்பி நீந்தாமல் இருந்துவிட்டேன். எனது மதியிலாவச் செயலே இன்று உம்மை நல்லவாவோடு, வெருவரக் குமுறுமிப் பூசலால்பொங்குமிக் காலத்தே, இடர்மிகுமிந் நெறியூடே நண்ண அழைத்துவந்தது. அளியள் யான் அன்றிழைத்தபெரும்பிழையைத் தீர்க்குமாறறியாமற் றிகைக்கின்றேன். (தனக்குள்) ஒரே ஒரு வழிதான் உண்டு. உண்மையை உரைத்துவிடுதலே நலம். அறிவிலாப் பேதையேன் என் உள்ளக்கருத்தை ஒளியாது அயலானிடம் வெளியிடவும் வேண்டுமோ? ஆம்! இவ்வாறு யான் நாணத்திற் கிரையாகி நலிகின்றதே முன்புரிந்தவப் பிழைக்குரிய தண்டமாகும். ஆயினும் இன்னொருகாரணம் சொல்லிப்பார்ப்பேன். (வெளிப்படையாய்) ஐய! என்தந்தை அரசனது வெகுளிக்கு உரியவர். கண்டவ ரவரைக் கண்டவிடங் கொன்று அவர் புன்விதித்தலையைக் கொண்டுபோய் மன்ன

னிடம் கொடுப்பாரேல் வெகுமதி பெறுதற்குரியவராவார். அன்னவர் புதல்வியை மணப்பதால் நீர் எளிமையே எய்துகின்றீர். பேசுங்கால், பின்னுமோர் செய்தி உண்மையா யுரைப்பதற் குளதுகண்டீர். ஐயா, நான் வேறொரு—எனக்காக வேறொருவர் காத்திருக்க—ஐய, எனக்காகவும் என்னைச்சேர்ந்தவர் பொருட்டாகவும் இன்னொருபெருமான் தனது உயிரையும் நொய்தாயெண்ணி, அரசரது கடுஞ்சினத்தையுங் கருதாது—ஐயோ, அவர் இன்னும் உயிரோடிருக்கிறாரோ, அல்லது என்னொற்றன் னுருயிர்துறந்தாரோ அறியேனே! பாவியேன் பொய்யே இங்குப் பரிந்தழுது நிற்கின்றேன்! எனது உள்ளத்தில் மறைந்துறையும் உண்மையினை அறிவீர். பெருந்தகையீர்! உமது பெருந்தன்மையைக் காட்டி என்னைப்பொறுத்து அகலுவீரோ", என்று அழுது வேண்டினாள்.

தன்னகத்தே தனித்துறையும் மறைபொருளை வெளியிட்டதாய் வெட்கமுடன் கூறி, விஜயனது மெய்க்காதலை வணக்கமோ டிம்மங்கை மறுத்தபோது, வியப்புந் துன்பமும் ஒருங்குடன் சேர்ந்து உடலின் ஓடு முதிரத்தை ஒருகணம் நிறுத்த ஆங்கே அறிவு கலங்கிய அவனுக்கு மண்ணும் விண்ணும் சுழன்றன. கையை நெற்றியின்மேல்வைத்துச் சிதறியோடும் பொறிகளின் உணர்வினைச் சிறைப்படுத்தி, சுதஞ்சனையின் மெய்ந்நிலையை யறிய அவளது முகத்தைக் கூர்ந்து நோக்கினான். உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் கள்ளமனத்தவர் கட்டழகியர் என்று அவன் கண்டும் கேட்டும் இருப்பதால், தனிமையிற் றங்கிய அவள் எண்ணமென்னென அறிவது அவன்நோக்கம். அத்தகைய அரிவை ஒருத்தி இவள் அல்லளாதலால், சொன்னசொற்களைமறுத்துரைக்கும்முறுவலொன்றுமவள் முகத்திற்கண்டிலன். ஆடவரை அணுப்பும் கண்களில் இமைத்தல் இல்லை. நாணத்தால் செக்கர்வானமென முகம் சிவப்ப, இனியொருநாளும் மால்வண்ணனை யடையமாட்டாதவள் போலும், இறந்துபட்ட மணாளனுக்கு இரங்குமொரு கைம்பெண்போன்றும், ஆருக்காதல் அலைப்பக்காட்டி, கையறுநிலை யுற்றவளாய் விம்மலுறும் அவளைக் கண்ட விஜயனுக்கு இனியொருகால் அவளிடம் இன்மொழி பெறலாம் என்கின்ற ஆசை அறவே ஒழிந்தது. ஒழிய, இருவரும் வெவ்வேறு துன்பத்தோடு ஒருவரையொருவர்நோக்கி நின்றனர். பின்னர், விஜயன் தன்னையும் தன் அருந்துன்பத்தையும் மறந்தனனாய், எதிர்நின்ற மெல்லியலாளது எளிமைக்கேமிக இரங்கி, அவளது துயர்நீக்குவான் கருதிய பரிவுபொங்க அவளுக்கு உடன்பிறந்தானொருவன் புரிதற்குரிய உதவியைத் தான் செய்வதாய் வாக்களித்து, அரசனிடம் ஏகிக் குறையிரந்து தன் இடுக்கண் களைந்துகொள்ள அவள் வேண்டுவாளாயின் தான் அவளை அங்கே அழைத்துச் செல்வதாய்த் தெரிவித்தான். அதற்குள்சுதஞ்சனையும் தேறி, விஜயனது நிலையை உன்னி, தன் அழுகையை விட்டு, இன்முகம் காட்டி, "பெருந்தகையீர், நீர் இராதாகிருஷ்ணனது இயற்கையை அறியீர். நாம் இருவரும் தனித்தனிச் செல்வதே மேலானது. நீர் விரைவில் சென்று ஆலாலரிடம் உமது வழிகாட்டியின்உண்மை நிலையைத் தெரிந்துகொள்ளும்", என்னலும் அகத்தே தோன்றியுள்ள குழப்பத்தை மறைப்பான்போன்று நெற்றியின் மீதிட்ட கையனாய் இரண்டொருஅடிகள் எடுத்துவைத்துப் பின்னும் ஏதோ நினைவுக்கு வந்தவன்போல் ஒருகணம் தயங்கி, மீண்டும் சுதஞ்சனை நின்ற இடத்தையே நாடிநடந்தான் "புல்லும் பூண்டும் முள்ளொடு செடியும் மூடிமறைத்த வோர் மனோரஞ்சிதம்போல் இவ்வனத்தில் வைகுறும் வனிதாய், உன்னை நான் மீண்டும் வற்புறுத்தி இடர்ப்படுத்த வந்தேன் என்று அஞ்சாதே! ஒருமுறை உள்ளத்தில் வேட்கையொடு ஒருவனை நினைந்தபின் எக்காலத்தும் அக்காதலை மாற்றாத உயர்குணத்தவள் நீ என்பதை நான் அறிந்துகொண்டேன். நான் உன்னிடம் விடைபெறுமுன் சொல்லுவ தொன்றைச் சற்றேகேள். என்வாள்கொடு எம் வளநாடுடைய கோவினுயிரினை ஒருகால் போரிற் காத்துளேன். நன்றியறிதலுள்ள அம்மன்னர், அவ்வேளை எனக்கு இவ் வாழியை அளித்து, தன்னால் எனக்கு உதவிவேண்டியபோது இதனைக் கொணர்ந்து காட்டி யென் நெஞ்சிலுள்ளதை அஞ்சாது தெரிவித்து வரம்பெற அருளினார். யானோ ஆடம்பர மற்றவன்; அரசனது அவைக்களத்தே உள்ள சிறப்புக்களைக் காதலித்தவனல்லன்; எனக்குச் சுரிகையும் அம்புமே சிறந்த நட்பினர் இருப்புச்சீராவே இயைந்த அரண்மனை. நான் மன்னனிடம் சென்று பெறுவதென்னுளது? நாடும் நன்னிலையும் விரும்பாத எனக்கு இவ்வாழியால் பயனுண்டோ? ஆதலால் இதை நீ என்னிடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டுகிறேன். கையை நீட்டி—கலக்கமும் களங்கமுமின்றி முழுமனதுடன் யான் அளிக்கும் இந் நற்கொடை உனக்கு நன்மை பயக்குவதாக! அரண்மனையின்கண் உள்ள ஒவ்வொரு வாயில் காப்போனும் இக் கணையாழியை அறிந்துள்ளான். இதைக் காட்ட நீ, அரண்மனையில் அரசனது திருவோலக்கம் எளிதில் அடைவாய். அவ்விடம் உன் மனதில் உள்ளது ஏதாயிருப்பினும் அதை வெளியிட்டு அரசன் எனக்களித்த வாக்கை உன்பொருட்டு நிறைவேற்றும்படி செய்துகொள். நான் போய்வருகின்றேனம்மா! உனது விழைவெலாங் குறையறநிரம்பி நீ நீடு வாழக்கடவாய்," என்று சொல்லி அவளது காந்தளங்கை விரல்களுக்கு ஓர்முத்தமளித்துவிட்டு, முன்பின் பாராது முடுகிநடந்து, ஆலாலனையும் நிமிர்ந்துநோக்காமல் வெறிகொண்டவன்போலோடி வழிகாட்டியுடன் விரைந்து சென்றான். சுதஞ்சனையும், அவனுக்குத் தன்னால் ஏற்பட்ட மனத்தளர்ச்சியையும், அவனது துன்பத்தைப் பாராது தனக்குற்ற குறையையே தீர்க்கவெண்ணி வேந்தனாழியை நன்கொடைதந்த பெருந்தன்மையையுந்நினைந்து இரங்கியவளாய்த் தன்னைக் காக்கவேண்டல் போல, உயரிய நடையையுடைய மானுட குணசீலனான விஜயனையும் காக்கும்படி உள்ளமுருகிப் பெருநேரம் கடவுளை வேண்டி வணங்கிநின்றாள்.

அகலுள் - இடம்; ஊர். உத்தரகுரு - போக பூமி. அரிவை - பெண். அணுப்பு - வஞ்சனை. ஆழி - மோதிரம். சுரிகை - உடைவாள், சீரா - கவசம். திருவோலக்கம் - அழகிய சபாமண்டபம்.

ஆச்சரிய சூடாமணி

[291-வது பக்கத் தொடர்ச்சி.]

5. அசோகவன அங்கம்

ராவண:—என்ன! என்ன! திருமாலா? ஏ, பயமாயிருக்கின்றதே! என் இனத்தவரான அரக்கர் இந்திரனைவென்று தேவலோகத்தை யழித்தபோதும், தெய்வப் பெண்களுடன் இந்திராணி பயந்தபொழுதும், அவ்விந்திரன் சகோதரனான அத் திருமாலின் பலமெல்லாம் எங்குப் போயிருந்ததோ!

மந்திரி:—என்ன! என்ன! தேவர்களை வென்றவர் யார்?

ராவண:—'தேவர்களை வென்றவர் யார்' என்று அறியாயோ?

மந்திரி:—அறியேனே!

ராவண:—யானே!

மந்திரி:—இது பொய்! அமுதம்பருகிய எமன், வருணன், குபேரன், இந்திரன் முதலியவர்களைத் தாங்கள் எளிதிலே வென்றிருக்கின்றீர்களே! எனின், கருப்புவில்லிதன் மென்மலர்ப் பாணங்களால் உங்கள் மனவலி எவ்வாறு சிதறியதோ!

ராவண:—என்ன! என்ன! பூங்கணையோன்என்னை அடிக்கின்றான் என்று எண்ணுதியோ!

மந்திரி:—வெளிப்படையே!

ராவண:—வெளிப்படை என்ப தன்மையே! பார்! முப்புரங்களையும் வெகுண்டு செற்றவச் சிவபிரானது நெற்றிக்கண் பொறியால் 'மன்மதன்' என்ற பெயர்மட்டும் உடையவனாயினனே. அப்படியிருக்க இப்பொழுது எப்படி யடிப்பான்; சொல். அழகிய விழிக்குமே லமைந்த புருவங்களுடன், சரத்கால சந்திரன்போல் விளங்கும் ஜானகியின் திருமுகமே என்னைப் பரவசப்படுத்துகின்றது.

மந்திரி:—தாங்கள் வேதவித்தைகளைக் கற்றிருக்கின்றீர்; பிரமதேவரின் பேரன்; பிறன்மனையாள்மேற் காதல்கொண்டு இவ்வாறு ஏன் இகழ்ச்சிக்கு ஆளாகின்றீர்!

ராவண:—இதுவும் இகழ்ச்சியா?

மந்திரி:—இதைவிட இகழ்ச்சி வேறில்லை.

ராவண:—விதிப்படி நூறுயாகஞ்செய்தவனும், திருமாலுக்கு மூத்தவனும் எழுதாக் கிளவியான வேதத்தின் உட்பொருளானவனும் தேவர்களுக்குத்தலைவனுமான இந்திரன் தன்னை "அகல்யா ஜாரன்" என்று அழைத்தலை ஏன் விரும்புகிறான்.

மந்திரி:—இகழ்ச்சியென்ப திருக்கட்டும். எல்லாக் காரியங்களையும் நிறைவேற்றும் தருமத்தை நமதூர் விட்டு அறவே விலக்கிவிட்டோமா?

ராவண:—நீதியறிந்தோய்! காரிய விருப்பமுடையவனன்றோ கருவியைக் கையாள்வான்; இந்திரனது குலிசத்தைப் போழ்ந்தபின்னும் குறையாத கூர்மை வாய்ந்த சந்திரஹாஸ மென்னும் வாள் எனக்குத் துணையிருக்கின்றது. ஆதலால், வன்மையற்றோர்க்கே உரியதோர் கருவியான உன் தருமம் ஒழிந்திடுக; வன்மைவாய்ந்த என்போலியர்க்கு எல்லாம் நன்மையே!

மந்திரி:—தலைவ, நின் திறமை இவ்வகைத்தே! வீர, நின்முதியோர் வழக்கத்தை விடுவது நீதியன்று; முனியரசின் ஒழுக்கமே நோக்கும் இராமனுடைய ஒழுக்கத்தையுமா புறக்கணிக்க வேண்டும்?

ராவண:—என்ன! என்ன! இராமனா நல்லவன்! சிலைத்தருமஞ் சிதைந்தழியத் தாடகையெனுந் தையலாளை எமனுலகை மடைவித்தவனும், தம்பியான சுக்ரீவனைப் பார்த்திருந்த வாலியின்மீது மறைந்துநின்று வாளி தொடுத்தவனும், மன்னர்க் குரியதனுவும் முனிவர்க்குரிய சடைமுடியும் என்றிவ்வாறு முரணுறு வேடந் தரித்தவனுமாய ராமனோ நல்லவன். யாங்கள் கெட்டவர்களோ! ஐயோ, நீங்கள் பிறர் நம்புவதையே நம்பும் பேதையர்!

மந்திரி:—ஐய! என்கடமை இவ்வளவே!

ராவண:—உன் கடமை யாது, சொல்?

மந்திரி:—முப்பொருளுடன் சேர்த்து வைத்தலே.

ராவண:—முப்பொருளென்று லென்ன?

மந்திரி:—அறம், பொருள், இன்பம்.

ராவண:—பிரித்துச் சொல்.

மந்திரி:—அறம்.

ராவண:—தண்டிக்கத்தக்கவரைத் தண்டிப்பதில் கருத்துடனிருக்குங் கூற்றுவன் என் தண்டனைக்குட்படுகின்றான்; பொன்னகர்ச் செல்வங்கள் என் கைக்குள்ளிருக்கின்றன; இனி யான் எதற்காகத் தருமந் தேடவேண்டும்.—அதன் பிறகு வேறென்ன!

மந்திரி:—பொருள்.

ராவண:—பொருளா லாகவேண்டியதென்ன!

மந்திரி:—பொக்கிஷமும் சேனையும் செழித்தல்.

ராவண:—இரவில் திரிபவரும் வானத்திற் சஞ்சரிக்க வல்லவருமான அரக்கர் எனக்குச் சேனை; என் தமையனான குபேரனே எனது பொக்கிஷம்; மூவுலகங்களும் என் வசப்பட்டிருக்கின்றன; இனிமேல் பொருளென்ன செய்யவேண்டும்.

மந்திரி:—இன்பம்.

ராவண:—அதையே நாம் விரும்புகிறோம்; அதனால் என் விருப்பம் நிறைவேற வேண்டும்.

மந்திரி:—சிறந்ததோ ரின்பத்தி லன்றோ சிந்தையைச் செலுத்த வேண்டும்.

ராவண:—அப்படியே செய்கின்றேன்.

மந்திரி:—இப்படியானால் பிறன் அனுபவித்தவளும் உன்னை வெறுத்தவளும் இப்பூமியிற்பிறந்தவளுமான இப்பெண் வேண்டாம்; உன் அந்தபுரத்து மாதர் வடிவில் தெய்வப்பெண்களைவிட மேன்மையுற் றிருக்கவில்லையா?

ராவண:—மூட! இக் காமவிஷயத்தில் பிறர் பிதற்றும் உபதேசங்களா லொன்றுமுடியாது. பிறரனுபவித்த சுவையுடையவளென்று திருமகளையும், பூமியிற் பிறந்தனவென்று சூரியகாந்தம் முதலிய கற்களையும், தம்மை வெறுத்தவளென்று கலைமகளையும், விட்டுவிடுகின்றார்களோ? இது நீதியா?

மந்திரி:—(தனக்குள்) இதன்பிறகு ஆயுதங்களே இவனுக்கு அறிவுறுத்த வேண்டும். யஜமானன் புத்தித் துணையைக் கடந்துவிட்டான்.

ராவண:—போ! இராமன் வரலாற்றை யறிந்துவர விரைவில் ஒற்றர்களுக்கு உத்தரவு கொடு.

மந்திரி:—அப்படியே. தங்களுக்கு மனங்கொள்ளா விவ்வார்த்தைகளை நான் கூறிய காரணம், தங்கள் பகைவனை ராமன்பாலுள்ள அன்பு மன்று, போர்ப் பயமுமன்று. தலைமகன் வெகுண்ட வாளினால் விசுவாஸியினும் உண்மையான ஊழியன் அவனுக்கு நன்மையே சொல்வான். (போயினன்)

ராவண:—வருஷவா! அசோகவனத்திற்கு வழி காட்டு.

கஞ்சுகன்:—மஹாராஜா! கட்டளைபோல; இப்படி, இப்படி; (இருவரும் அசோக வனத்திற்குள் நுழைதல்)

ராவண:—(எங்கும் பார்த்து) பழகிய விடத்திலேயே கிடந்துழலும் மனப்பான்மை மிக்க ஆச்சரியமே. பொன்னுடு புனைந்துபாயும் விண்ணுற்றின் கரையிலிருந்து யான், கண்ணோராயிரமுடைய புரந்தரனெதிரிலே பெயர்த்திப் பூதலங்கொணர்ந்த தருக்களோ ஈங்குள. அம்மரங்களின் ஒருபக்கம் அன்னப் பறவைகள் இணைசேர்ந்து பொற்றாமரை மலர்களைக் கோதிக்கொண் டிருக்கின்றன. மற்றொருபால் மாங்குயில்கள் துணையொடுங்கூடி நனையொடுங் குழைந்த தளிரைக்கண்டு களிக்கின்றன. சீதையோ இங்கிருந்த போதிலும் ராமனது தவவனத்தையே நாடியிருக்கின்றாளே!

கஞ்சுகன்:—(திரைக்குள்) சண்பகமலர் மணத்தை நினைக்கும் வண்டுகள்போலவே சீதை இராவணனுடைய மாட்சிமையை நினைக்கின்றாள்.

ராவண:— (காமவுணர்ச்சி காட்டி) அசோகம், தேமா அனையமரங்களின் பூங்கொத்துக்களைமட்டும் அம்புகளாகவைத்து மனிதரை வெகுவிரைவில் கலக்குகின்ற மன்மதன் இப்பொழுது தேவலோகத்திலுள்ள கற்பகத்தரு மலர்களைப் பாணங்களாகக் கொண்டபின் கேட்கவேண்டுமா? வருஷவா! சீதை சிஞ்சமரத் தடியிலன்றோ இருக்கின்றாள்?

கஞ்சுகன்:—ஆம், சுவாமி!

ராவண:—தினந்தோறும் நான் சீதையைப் பார்க்கும்பொழுது அவள் வெறுப்புடன் வேறிடம் பார்க்கின்றாள். நான் செவிக்கு இனியமொழி கூறும் பொழுது அதைப் பொறுக்காமல் தன் கைகளாற் செவி பொத்திக் கொள்கின்றாள். நான் அவள்முன், கைகூப்பிநிற்கும்போது ராமனைக் குறித்துப் புலம்புகிறாள். அவளை என்வயப்படுத்தும் உபாயம் என்னவென்று எனக்குத் தெரியவில்லையே!

கம்பராமாயணம்

அயோத்தியா காண்டம்.

1. மந்திரப் படலம்.

[296 வது பக்கத் தொடர்ச்சி]

ஆசையாற் புரிந்த வெல்லாம்
அவலமாய் முடிந்த தன்றே.

வெய்யவன் குலமுதல் வேந்தர் மேலவர் செய்கையிற்றான் ஒரு முறையுந் திறம்பலின்றிப் பேரரசு நடாத்தினனென விளம்பிய தயாதன் கைகேசிக் களித்தவாக்கைக் காக்குமொரு செய்கையால் அக்குலவொழுக்கந் தளர்ந்தோய்ந்தனன் என்னற்கிங்கேதேனு மையமுளதேல், மன்னர் மரபும் நீதியின் நீர்மையும், விரதமறைப்பொருள் மெய்ந்நெறியும் கரதல முற்றொளிர் நெல்லிகடுப்பக் கண்டுள தகைமையோன் பரதனே,

முழுதுல களித்த தந்தை
முந்தையோர் முறையி னின்றும்
வழுவின னதனை நீக்க
மன்னனைக் கொணர்வான் வந்தேன்

[உலக முழுவதையும் அளித்த என் தந்தை, அவன் முன்னோர்களது முறையிலிருந்து தவறிவிட்டான். அந்த அநீதியின் தீமையை நீக்கும்பொருட்டு யான், மன்னனாகவேண்டிய இராமனை அழைத்துச்செல்ல வந்துளேன்.]

என்று பின் குகனிடத்தில் கூறுஞ்சொற்கள் அவ்வையத்தினை விலக்குதல்வேண்டும். ஆதலின் தளர்வுடை மூப்பிடைத் தயாதன் முழ்கிணைகி அன்றவ்வவைக்கண்ணிருந்த அமைச்சர் முதலாயினோர்க்கு, ஆயிரம் பணமுடை யாதிசேடனும் திக்கயங்களும் குலவரைகளும் பொறைநீங்கும்படி தான் தாங்கிய புவியினை இனிப் பொறுத்தற் காற்றாமையும், தன் முன்னையோரெல்லாம் தம் மைந்தர்க்கு அரசினை அளித்துவிட்டு வீடு பெற்றவாறும் கூறித் தானு மவ்வாறே செய்ய நினைத்ததைச் செப்பினன். மற்று, பொறிகளைத் தவிர்ந்துபோகும் திறமது தனக்கு உண்டோவென அவர் அயிர்க்காவண்ணம்,

வெள்ளநீ ருலகினில் விண்ணி னுகரில்
தள்ளரும் பகையெலாந் தவிர்ந்து நின்றயான்
கள்ளரிற் கரந்துறை காம மாதிபாம்
உள்ளுறை பகைஞருக் கொதுங்கி வாழ்வெனோ

[கடல் சூழ்ந்த பூவுலகிலும் தேவலோகத்திலும் பாதாளலோகத்திலும் இருந்த கடக்கரும் பகைவர்களையெல்லாம் கடந்துநின்ற யான், கள்வர்போல் மறைந்துகிடக்கின்ற காமம் முதலிய உள்பகைகளுக்குப் பயந்து வாழ்வேனோ.]

என்றும்,

பஞ்சிமென் றளிரடிப் பாவை கோல்கொள
வெஞ்சினத் தவுணர்தேர் பத்தும் வென்றுளேற்
கெஞ்சலின் மனமெனு மிழுதை யேறிய
வஞ்சுதேர் வெல்லுமீ தருமை யாவதோ

[செம்பஞ்சூட்டிய மெல்லிய தளிர்போன்ற பாதங்களையுடைய பாவைபோல்வாளாகிய கைகேசி சாட்டையைக் கையிலே கொண்டு எனக்குச் சாரத்தியஞ்செய்ய, கொடிய கோபமுடைய அசுரர்களது பத்துத் தேர்களையும் வென்றிருக்கும் எனக்கு, (ஆசை) அடங்காத மனம் என்னும் ஒரு மடையன் (அல்லது பேய்) ஏறி நடத்தும் பொறிகளென்னும் ஐந்துதேர்களை வெல்வதென்பது அருமையாகுமோ].

என்றும் அவர்களைத் தெருட்டியபின், முத்தியின் மேன்மையையும், அன்னதற்குத் துறவலால் அயலொருநெறி யின்மையையும் தெரியச் சாற்றினன். போகங்களனைத்துந் குறைவின்றித் துய்த்திருந்த இவ்வேந்தனுக்குத் துறவின்பால் புதியவூக்க மின்று புக்கவா றென்னென நினைப்பவருஞ் சிலர் அங்கு இருப்பரென வுன்னித் தான் துய்த்ததுபோன்றதெல்லாம் தோற்றமேயன்றி வேறாகாமையை,

இனியது போலுமிவ் வரசை யென்னுமோ
துனிவரு நலனெனத் தொடர்ந்து தோற்கலா
நனிவரும் பெரும்பகை நவையி னீங்கியத்
தனியர சாட்சியிற் றாழு முள்ளமே

என்ன விளம்பினன்.

[இச்செய்யுளின் பொருளும் நயமும், "தோய்ந்தே கடந்தான் திருவில்தொடர் போக பௌவம்" என்று கம்பர் அரசியற்படலத்தி லுரைத்துளதற்கு இது மாறுபடவில்லை என்னு மமைதியும், முன்னரே (1-வது வால்யூம், 352-வது பக்கம்) வரையப்பெற்றிருத்தலால் ஈண்டுமதனை இயம்புதல் மிகையாகும்].

இன்னதே தன் கருத்தென வற்புறுத்துவான்,

கச்சையங் கடகரிக் கழுத்தின் கண்ணுறப்
பிச்சமுங் கவிகையும் பெய்யு மின்னிழல்
நிச்சய மன்றெனி னெடிது நா ளுண்ட
வெச்சிலை நுகருவ தின்ப மாகுமோ

[கயிறுகட்டியதும், மதஞ்சொரிவதும் ஆய யானையின் கழுத்தில் அமர்ந்து, பீலிக்குச்சமும் வெண்கொற்றக் குடையும் பொழிகின்ற இனிய நிழலானது சாச்வதமற்றதென்றபின், அநேகநாள்கள் அநுபவித்த இந்த எச்சிலை மீண்டும் மீண்டும் தின்றுவருவது இன்பமாகுமோ]

என வினவினன் தயாதன். தான் விலகிநீங்கிய அரியணை நிறைவுற அமர்வதற் கிருப்பவன் இராமன் என்ற நினைவே தயாதனது மனத்தின் முதல்நின்றதேனும் அன்னதனை இறுதியிற் கூறுவானாய்,

பெருமக னென்வயிற் பிறக்கச் சீதையாந்
திருமகண் மணவினை தெரியக் கண்டயான்
அருமக னிறைகுண தவனி மாதெனு
மொருமகண் மணமுங்கண் டுவப்ப வுன்னினேன்

[பெருமகனாகிய இராமன் என்னிடத்திற் பிறக்க, சீதையாகிய திருமகளது மணக்கோலத்தைக் கண்ணாரக்கண்டயான், நிறைந்த நற்குணமுடைய பூமிதேவி யென்னும் அருமையான அவ் வொருமகளது மணமும் (பட்டாபிஷேகமும்) கண்டு களிக்க எண்ணினேன்]

"இனி, திருமகளும் நிலமகளும் தம் தவப்பயனை எய்தாவண்ணம் நான் இடையேயிருந்து அவர்களைக் காக்கவைப்பது தருமமாகாது.

ஆதலா லிராமனுக் கரசை நல்கியிப்
பேதைமை தாய்வரும் பிறப்பை நீக்குவான்
மாதவந் தொடங்கிய வனத்தை நண்ணுவேன்
யாதுநுங் கருத்தென வினைய கூறினான்

[ஆகையால், இராமனுக்கு இராச்சியத்தைக் கொடுத்து, இந்த அறியாமையைத் தொடர்ந்துவரும் பிறவியை நீக்கும்பொருட்டுச் சிறந்த தவத்தைத் தொடங்கக் காட்டையான் அடைவேன். இதுபற்றி உங்கள் எண்ணம் என்ன," என்று இவையனைய சொற்களைக் கூறினான்]

கோசல மன்னனிவன் இங்குக் கூறியனவெல்லாம் வடநூலினின்று மொழிபெயர்ந்து வந்தனவாகா. இவ்விரு நூலையு மொப்புநோக்குவோர்க்கு உள்ளுறை வேற்றுமை சில உணர்தற் கிணங்கிநிற்கும். "யான் உயிருடன் இருக்கும்போதே எனது இராமன் ஏன் அரசனாகக் கூடாது. ஏன் இந்தப் பாக்கியத்தை நடத்தி எனது கண்ணால் பார்க்கலாகாது" எனத் தயாதன் தனக்குளே பன்முறை விழைந்தெண்ணம் பலநாள் முதிர்ந்தபின் அவையினைக் கூட்டி அன்னதனை ஆராய நேர்ந்தனன் என்பர் வான்மீகி முனிவர். அவையின்கண் விளம்பிய மொழிகளோ தன்னுடைய ஆசைக்கே இராமனை இளவரசாக்க வேண்டினன் என்னும் பொருளை உணர்த்தவில்லை. குலமுறை வழாது நெடுங்காலம் இவ்வுலகத்தைத் தான் ஓம்பியவாறும், வயதின் முதுமையால் தான் தளர்ந்திருப்பதால் அரசின்சுமை தாங்க ஆற்றாமையும், இனிச்சிறிது இளைப்பாற நினைத்திருப்பதையும் கம்பரிற்போலவே வான்மீகத்திலும் தயாதன் இயம்பினன். இதன்மேல், தான் பரகதியடைதற்குரிய துறவு தவம் முதலியவைகளை மேற்கொள்ளவேண்டுமென்னும் எண்ணத்தைத் தயாதன் வற்புறுத்தியதாகக் கம்பர் கூறுகின்றார் மன்னுயிர்க்குறுவதே செய்துவைகிய அம்மன்னன் தன்னுயிர்க் குறுவதும் செய்ய எண்ணியதாய் முதலில் தொகுத்துச்சுட்டிய குறிப்பே பின்னர் வகுத்துரைக்கப்பெற் றிருக்கின்றது. வான்மீகத்தின் நோக்கமோ வேறு. "தான் அரசு புரிந்தெய்த்துவிட்டதால் உயிர்களை இனிச் செவ்வி தின் அளிப்பதற்கு இராமனே ஏற்றவனாயினன். என்னைக் காட்டிலும் நல்ல குணமுடையவன் இராமன்; உலகத்தை இன்னும் நன்றாக இரக்ஷிப்பதற்காக இராமனுக்குப் பட்டங்கட்டப் போகின்றேன். இவ்வித சௌக்கியத்தை உலகத்திற்குச் செய்து நான் கவலையற்று இளைப்பாறி இருக்க வேண்டுகின்றேன்" என வான்மீகத்தில் விளங்கும் வாசகங்கள், தன்னுடைய நன்மையைப் பெரிதுங் கருதுதலின்றி மன்னுயிர்க்கு உறுதியையே மீண்டும் பெருக்குகின்ற சிந்தனையால் இராமனை அவன் சிம்மாதனத்தில் அமர்த்த வேண்டினன் என்பதைத் தெரிவிக்கின்றன. தன்னலங் கருதாத் தனிப்பெருங் குணத்தைத் தயாதன்பால் நிலைக்கவைத்த மேன்மை வான்மீகிமுனிவருக்குரியதாகின்றது. கம்ப ரதனைச்சிறிது அயர்ந்தனர் போல் தோன்றுவது என்னென வியக்கவும் வேண்டுவதில்லை. பின்வருஞ் செயலினை இயற்கையென்றாக்கல்பொருட்டுத் தயாதன் தன்னிலை தளர்ந்துவிட்ட முதுமையில் முற்றினானபதைச் சாதிப்பதற்கே கம்பர் இவ்வாறு வாசகப்போக்கை மாற்றினாரெனக் கொள்ளல்வேண்டும். அதுவுமன்றி, அந்தத்தில் இரண்டும் ஒன்றேயாய் முடிகின்றன. இராமனுக்குப் பட்டாபிஷேகஞ் செய்துபார்க்கின்ற பாக்கியத்தைத் தான் ஏன் பெறுதற் கூடாது என்னுமாசையால் அங்கு விவகரித்தனன் தயாதன். அதனோடு தன்னுயிர்க் குறுவதும் செய்துகொள்ளத் தயாதன் இங்கு முயன்றனன். இவை யிரண்டும் தன்னைப்பற்றி எழுந்த நினைவுகளாதலால் தயாதனுக்கு அதுவும் நிறைவேறவில்லை, இதுவும் நிறைவேறவில்லை. தயாதன் தன்பொருட்டு நாடிய ஆசையும் நன்மையும் அவலமாயின. விதியினது விபரீதத்தை இருபெரும் புலவர்களும் இவ்வாறு தனித்தனி காட்டினர். அவ்வாறு காட்டுங்கால், இராமன் அரசனாகவேண்டுமென்ற ஆசை தயாதனுக்கு இருந்த அளவு கோசலப் பெருமக்களனைவர்க்கும் ஒருங்கே இருக்குமாதலால், தயாதன் தன்னை வேறாகப் பிரித்துக்கொண்டு பேசியபெற்றி இதன்கண் வலியுறுதற்கு வழியில்லை என்றுணர்ந்த கம்பர்பெருமான், தவம் முதலியவற்றால் தயாதன் தனக்கென்று தனியான நலம் சில நாடினான் என்பதைக் கற்பித்து, அதனால் அவன் தன்னைப் பிரித்துநின்ற பான்மையை வற்புறுத்தும் வகைதனைச் சூழ்ந்தனர். முதுமையின் கொடுமையை முடியக் காட்டுஞ் சூழ்ச்சி இது கம்பர் இழைத்ததே, கூனுஞ் சிறியகோத்தாயும் கூடியிழைத்த சூழ்வினையைப் பெரிதும் இயற்கைக் கியன்றதாக்கியது என்னல் வேண்டுமோ!

எம்மிடம் கிடைக்கும் புத்தகங்கள்

கம்பராமாயணம்—பாலகாண்டம்

(T. N. சேஷாசலம் ஐயர் பதிப்பு.)

சிற்றடக்கமாய் அழகிய கட்டிடத்தில் புதிய முறையில் பதிப்பிக்கப் பெற்றுளது. பதிப்பாசிரியர் பதம்பிரித்தும், தொகைநிலைத் சொடர்களை விரித்தும், அன்வயப்படுத்தியும், அவாய்நிலைகளை வருவித்தும், கவியின் சொற்கொண்டே பொருளை விளக்குகின்றார். அரும் பதவுரையும், விசேடக்குறிப்புகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. விலை. ரூ. 3.

ஏமாங்கத் திளவரசன்

(T. N. சேஷாசலம் ஐயர் எழுதியது)

இலக்கிய நயங்கள் யாவும் துளங்குமோர் இன்னியற் காதற்கதை. அன்பின் வன்மையும் வாய்மையின் தூய்மையும், பேரவாவின் பேதமையும், புன்கவிபுகுந்துசெய்யும் துன்மதிச்சூழ்ச்சியும்,பொருந்திக்கலந்து கதையினை நடத்தி வைக்கின்றன. சம்பாஷணைத்திறமும் சொல்நயச் சுவையும் கருத்தினைக் கவர்கின்றகதையமைப்பும், பாத்திரங்களின் பொருத்தமும் வாய்ந்தது இந்நூல். விலை. ரூ. 1.

முருகன்—ஓர் உழவன்

ஸ்ரீமான் K. S. வெங்கடரமணி M. A. B. L. ஆங்கிலத்தில் எழுதிய நூலிற்கு ஸ்ரீமதி கிருஷ்ண குமாரிசெய்த சிறந்தமொழி பெயர்ப்பு. உழுதுண்டு வாழ்வார் நிலையின் ஏற்றமும், தொழுதுண்டு பின் செல்பவர் தாழ்மையும் செவ்வனே இந்நாவல் நூல் எடுத்துக் காட்டுகின்றது. விலை ரூ. 1–8.

திருக்குறள்

(மூலமும் சொற்குறிப்பகராதியும் விஷய ஒப்புக் குறளும்—வா. மார்க்கசகாயம் செட்டியார் பதிப்பு.)

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைமாத்திரம் 300 பக்கங்களில் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக்குறளைப் படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானது. இதனருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக் காட்டுவது சுலபமன்று. விலை. அணு 12.

குலசேகர ஆழ்வார் திருவாய் மலர்ந்தருளிய

பெருமாள் திருமொழி

மூலமும், பு. பா. இரத்தின சபாபதி நாயக்கர் இயற்றிய பதவுரை, விசேடவுரை இலக்கணக் குறிப்பு, சரித்திர ஆராய்ச்சி முதலியவைகளுடன் சேர்ந்த விருத்தியுரையும் கொண்டது. பிரபந்தத்தின்கண் பயிற்சி இருப்போர்க்கும் பயில முயல்வோர்க்கும் இப்பதிப்பு மிகுத்த பயனும் உதவியும் அளிக்கவல்லது. காலிகோ ரூ. 1-4. மார்பில் ரூ. 1.

அகத்திய முனிவர் அருளிச்செய்த

ஆறெழுத்தந்தாதி

முருகக் கடவுளை முழுமுதற் பொருளாக உபாசனை செய்வதற் குரியதாய், ஷடாக்ஷர மந்திரத்தின் வைபவத்தை அகத்தியரே பாடியுளர் எனக் கருதப்படுகின்ற நூறு செய்யுள் கொண்ட நூல். பென்ஷன் டாக்டர் V. S. அருணசலம் பிள்ளையவர்களால் விரிவும் தெளிவும் பொருந்திய உரையோடு பதிப்பிக்கப் பெற்றது. விலை. அணு 12.

எல்லாப் புத்தகங்களுக்கும் தபால் வி. பி. செலவு வேறு.

கலாநிலயம் ஆபீஸ், புரசைபாக்கம், சென்னை

நாஷனல் இன்ஷுயரன்ஸ் கம்பனி, லிமிடெட்.

(ஹெட் ஆபீஸ்:—கல்கத்தா)

இந்திய இன்ஷுயரன்ஸ் ஆபீஸ்களில் மிகவும் முன்னேறிவரும் ஆபீஸ் இதுவொன்று.

குறைந்த பிரீமியமும், மற்றவகைகளிலுள்ள பலவித சவுகரியங்களும் இக்கம்பனியை எல்லாரும் விரும்புவதற்குக் காரணமாயிருக்கின்றன.

வேறெங்கேயாகிலும் நீங்கள் இன்ஷூர் செய்து கொள்ளத் தீர்மானிப்பதன்முன் தயவுசெய்து, எங்கள் ரேட்டுக்களையும் எம்மிடத்தில் இன்ஷூர் செய்வதால் வரக்கூடிய நன்மைகளையும் லாபங்களையும் ஒத்திட்டுப் பாருங்கள்.

பிராஸ்பெக்டஸ் ஏஜன்ஸி முதலியவைகளுக்கு:—

கெ. எஸ். கோபாலய்யா, கிளைக்காரியதரிசி

மதராஸ் பிரான்ச், லோன் ஸ்கோயர்,
பிராட்வே, சென்னை.

ANCIENT JAFFNA

A MOMENTOUS BOOK

BY

Mudaliar C. RASANAYAGAM, C. C. S.

With a ForeWord By

Professor S. KRISHNASWAMI AIYANGAR, M. A.

An authentic History of North Ceylon, particularly of Jaffna, based on Epigraphic, Linguistic, Archeo-logical researches, is stated here for the first time in a connected, logical manner from ancient times up to the occupation of the Island by the Europeans.

Every student of History would read this book with pleasure and profit.

Price Rs. 5—8—0. V. P. Charge Extra.

MANAGER:—

KALANILAYAM,
11, VELLALA STREET,
Purasawalkam, MADRAS.

வர்த்தமானம்

வான்மீகி தின விழா

ஸ்ரீராமநவமியன்று, சென்னை சமிஸ்கிருதக் கல்லூரியில் வான்மீகி தினம் கொண்டாடப்பட்டது. அப்பொழுது சென்னைப் பச்சையப்பன் கல்லூரி ஸமிஸ்கிருத பண்டிதரான பிர்ம்மஸ்ரீ அநந்தாசாரியார் ஸ்வாமி, 'சீதாயா: சரிதம் மஹத்' என்னும் ஸ்லோகத்தைப் பின்வருமாறு விளக்கினர்:—

"இராமாயணத் துவக்கத்திலே, இராமசரிதையைச் சீதையின் பெருஞ்சரிதம் என்று வால்மீகி கூறியுள்ளார். இதனுல் ஜானகியின் பெருமையை விளக்குவதே வான்மீகியின் காவியத்தின் நோக்கம் என்பது தெரியலாகும். இராமன் என்றால் இரமாதேவியைச் சார்ந்தவன் என்பது பொருள். ஸ்ரீதேவியானவள் எப்பொழுதும் திருமாலைப் பிரியாதிருந்து அவருக்கு நித்தியமானபெருமையை அளிக்கின்றாள். சீதையைஇராவணன் தூக்கிச்செல்லுகையில் அவள் கடாக்ஷம் அநுமனுக்கு ஏற்பட்டதினுற்றான், அவன் தென்திசைக்குத் தூதுசென்றுசீதையைக்காண நேர்ந்தது. இராமனது நட்பிற்குச் சுக்ரீவன் பாத்திரமானதும் ஸ்ரீதேவியின் கடாக்ஷம் கிடைக்கப் பெற்றமையால். வாலி லக்ஷ்மீகடாக்ஷம் பெற்ற சுக்ரீவனைப் பகைத்ததால் கொல்லப்பட்டான். இன்னொன்றும் கவனிக்கற்பாலது. பாலகாண்டத்தில் வான்மீகிமுனிவர் இராம குணங்களைப்பாராட்டவில்லை; சீதையின் கல்யாணத்திற்குப் பிறகே இராமன் குணங்களை வான்மீகி புகழ்கின்றார். எனவே சீதையால்தான் இராகவன் சிறப்பைப் பெறுகின்றான்."

பின், தஞ்சையில் ஜில்லாஜட்ஜியாக விருக்கும் பிரம்மஸ்ரீ K. S. ராமஸ்வாமி சாஸ்திரியார் அவர்கள் 'வாழ்விற்குரிய உறுதியெல்லாம் தரவல்லது இராமாயணம்,' என்னும் விஷயம்பற்றி ஆங்கிலத்தில் பேசுகையில், அறிவிலாச்சனங்கள்புண்ணியம்பெறவென்று இராமாயணத்தைப் படித்தும் கேட்டும் வருகின்றனர் என்று உரைவழங்க விரைகின்றவர் சிரிக்குமுன் சிந்திக்க முயலல் நலமாகும் என்றும், பணத்தையே கும்பிட்டுக் கிடப்பதினும் இப் பாமரத் தன்மைவாய்ந்த இராமாயணம் படித்துப்பெருகுவது சிறந்ததென்றும் முன்னுரை கூறி, அவர் நிகழ்த்திய உரைச் சுருக்கம் வருமாறு:-பணத்திலேயே நாட்டம்வைத்து வாழ்வது தான் வாழ்வின் இலக்கணமோ? பிணமாயவிப் பணத்தைச் சேமிக்கும் முயற்சியிலிருந்துதான் வறுமையும், நோயும், கொடுமையும் கோபமும் புழுக்கின்றனவென்பதை ஏனோ அவர் இன்னும் அறியாதுபோகின்றனர். பணத்தைச் சேமித்தவர் குறையிலா நிறைவை யெய்தித்தான் உளரோ? வறுமையென்பது உண்மையில் நிறைவைப்பெறாத நமது சிறிய மனத்திலே, முளைக்கின்றமுட்களேயல்லாமல், அப்பெயருடையவொன்றும் இல்லவேயில்லை. பணத்தால் வரும் பெருமிதநாகரிகம் செய்துள பலதீமைகளில் நிறைவிற் கிடமானகடவுளைக் கைகழுவிவிட்டு வருவதொன்று. இந்நிலை வலியுறுமாயின் உய்ய வழியிலாது போகும். நமது பண்டை ஸநாதன தர்மமும் அதன் பயனாய் எழுந்த ஒட்டமில்லாச் சாந்தியும், போட்டியில்லா நாகரிமும் மீண்டும் நம்மிடைப்பரவி நிலைக்கவேண்டுமெனில் காவிய நலம் கரைபுரண்டோடும் இம்முனிவரது இராமாயணமே அதை நல்கிவைக்க வல்லது. இராமாயணம் வாழ்க்கையுடன் தொடர்புகொண் டமையுமெனின் நம் வாழ்க்கை தர்மமாய், நீதியாய், சாந்தியாய் நிறைவுற்றுத் தெய்வத்திருவெழில் எங்கணும் வீசும். நமது வாழ்க்கையை ஒரு யோகசாதனமாகக் கொண்டு ஆத்மானுபவத்தைப் பெறுவதுதான் பிறவியால்பெற்ற பயன். மற்றவெலாம் வாழ்க்கைக்கு வேண்டியவைகளாகா. அயோத்தியின் நாகரிகம், காட்டுமிராண்டி வாழ்க்கையன்று, அதுதான் நாகரிகவாழ்க்கை. மேனாட்டு நாகரிகத்தின் வயமாகாது நம்மைக் காத்துக்கொள்ளும்பொருட்டு இராமாயணத்தை இடைவிடாது என்றும் நம் இதயந்தழைக்க ஓதிவரல்வேண்டும். தர்மம் தலையெடுக்குமேயானுல் வேண்டுவன தாமேவந் தமையாவோ; நாம்தேடியா செல்லவேண்டும்.

பின்னர், வேறு சிலரும் பேசியதோடு கூட்டம் முறையே நிறைவுற்றது.

***

ஸங்கீதம் கற்பிக்கும் முறை:—சிதம்பரம் எஸ். குருஸாமி ஐயர் அவர்கள் பெண்களுக்குச் சங்கீதம் கற்பிக்கும் முறையைப் பற்றிக் கூறுவதாவது:—

பெண்குழந்தைகளுக்கு வயது 10 நிறைந்த பிறகே சங்கீதம் கற்பிக்கவேண்டும். இப்பொழுது பெண்களுக்குச் சரியான முறையில் சங்கீதம் கற்பிக்கப்படுவதில்லை. இரண்டுவருடகாலம் உபாத்தியாயர் வைத்துச் சொல்லிக்கொடுத்தும் பயன் ஒன்றும் ஏற்படுவதில்லை. பெண்களுக்கு 5முதல்6½ கட்டைச்சுருதிவரைபாடக் கூடியபடி சாரீரம் அமைந்துளது. பாட்டுவாத்தியார்களுக்கு அவ்வளவு சுருதியில் பாட இயலாதபடியால், பெண்களைக் கீழ்ச்சுருதியில் பாடச்செய்து விடுகின்றனர். இப்படிச் செய்வது தவறு, கற்கும் குழந்தைகளுக்கும் கஷ்டம். ஆகவே ஒரு கருவிமூலம் குழந்தைகளுக்குக் கற்பிப்பதுநலம். பாட்டு உபாத்தியாயர் இதற்குப் பிடிலை உபயோகித்துப் பெண்களைப் பாடச் செய்யலாம். இதனுல் கீழ்ச்சுருதியில் பெண்களைப் பாடச் செய்யவேண்டிய அவசியம் ஏற்படாது. அர்மோனியத்தையும் இரண்டு வர்ணங்கள் பாடமாகும்வரையில் உபயோகிக்கலாம். பிறகு அர்மோனியம் இல்லாது பாடச் செய்யவேண்டும். இரண்டு வருடம் சங்கீதம் பயின்ற பெண்ணிற்கு இராகஞானம் ஏற்படும்படியும், சுருதிலயம் தவறாது கீர்த்தனங்கள் பாடும்படியும் பயிற்றுவித்தல் அவசியம். இதற்கு இரண்டு வருடங்கள்போதும். 6 மாத காலத்திற்குள் 12 ஸ்வரஸ்தானங்களையும் தனித்தனியேபிடித்துக்காட்டும்படியான ஞானம் ஏற்படச்செய்யலாம். பிறகு ஸ்வரஸாகித்யத்துடன் சிறுகீர்த்தனங்களையும், ராகமாலிகை, வர்ணம் இவைகளையும் சொல்லிக் கொடுக்கவேண்டும். ஒரு வருஷகாலத்தில் இவைகளைக் கற்றுக்கொடுத்து விடலாம். அதற்குமேல் பெரிய கீர்த்தனைகளையும், பதங்கள், ஜாவளிகள் முதலிய சில்லரை உருப்படிகளையும் ஒருவருஷத்தில் கற்பித்துவிடலாம். அர்மோனியத்தை வாசித்துக்கொண்டு பாடாமல் சுருதியைவைத்துக்கொண்டு பாடும்படி பயிற்றுவிக்க வேண்டும். அப்பொழுது செலவழிக்கும் பொருளுக்கேற்ற பலன் ஏற்படும். ஆகவே, பெற்றோர் இவைகளைக் கவனித்து இவ்வழியில் சொல்லிவைக்கும் திறமையுள்ள உபாத்தியாயர்களை நியமிக்கவேண்டும்.

189/100

***

மதுரை முனிசிபாலிட்டி:— ஏப்பிரல் மாதம் 13-ந்தேதி யன்று கூடிய மதுரை முனிசிபாலிட்டி கூட்டத்தில், முனிசிபல் தலைவர்மீது நம்பிக்கையில்லை என்ற தீர்மானத்தை ஸ்ரீமான் துளசிராம் என்பவர் கொண்டு வந்தார். தலைவர் கவுன்ஸிலர்களைக் கேட்காதும் சபையின் ஆதரவைப்பெறாதும் வேலைகளைச் செய்து வருகிறார் என்றும், கவுன்ஸிலர்கள் கொண்டுவரும் தீர்மானங்களைத் தள்ளிவிடுகிறார் என்றும், நிர்வாக விஷயம் சரியே கவனிக்கப்படவில்லை யென்றும் தலைவர்மேல் குற்றம் கூறப்பட்டது. கூட்டத்திற்கு வந்திருந்த 32 கவுன்ஸிலர்களில் 19 பேர் சாதகமாகவும் 13 பேர் பாதகமாகவும் ஓட்செய்யத் தீர்மானம் நிறைவேறியது.

KALANILAYAM.
REG. NO. M. 2324.

பாரதி

தேசீய மாதத் தமிழ்ப் பத்திரிகை

ஆசிரியர்:—R நாராயணசுவாமி

இப்பத்திரிகை திங்கள்தோறும் 80 பக்கங்களுடன் வெளிவருகின்றது. அரசியல் விடுதலையும், சமுக முன்னேற்றமும், இந்திய வியாபாரக் கைத்தொழில் முன்னேற்றமும் இப்பத்திரிகையின் நோக்கமாகும். நல்ல காகிதத்தில் அச்சியற்றப் பெற்றுளது. ஆண் பெண் இருபாலாரும் அறியும் வண்ணம் எளியநடையில் பல அறிஞர்களால் எழுதப்பெற்ற வியாசங்களைக் கொண்டுளது. இப்பொழுது இரண்டாவதாண்டு ஆரம்பித்திருக்கின்றது. இந்தியதேயத்தின் நன்மையிலும் விடுதலையிலும் எவ்வகைத் துறையின் முன்னேற்றத்திலும் ஆர்வம் பிறக்கவும், பிறந்ததை வளர்க்கின்ற ஊக்கம்பெருக்கவும் இப்பத்திரிகை அரியதோர் மருந்தாகும்.

உள்நாடு	சந்தா	ரூபா	2 0 0
வெளிநாடு	,,	,,	2 8 0
தனிப்பிரதி விலை		அணு	0 4 0

விலாசம்:—'பாரதி' காரியாலயம்,

உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

ரூ. 500 இனும்! எப்படி?

விபரம் தெரிய ½அணு ஸ்டாம்பும் விலாசமும் அனுப்புங்கள்.

கே. எஸ். முத்தையா கம்பனி,

தபாற்பெட்டி 99. சென்னை.

அமிர்த குண போதினி

5-ம் ஆண்டு பிறந்தது இது போன்ற நவீன தமிழ் மாதச் சஞ்சிகை இதுவரை வெளிவந்ததில்லை விஷயம் யாவும் புதியதாகவும், அற்புதமாகவும் இருக்கும். ஜாதிமத வித்தியாசமின்றிச் சகலரையும் களிக்கச் செய்யும். மாதிரி காபி பார்த்தாலே சந்தா சேர்வீர்கள். 64 பக்கம் கொண்டது. வருடசந்தா ரூ 1 வெளிநாடு ரூ 1-4-0 மாதிரி காபி இனும்.

ஆங்கில ஆசான்

10-ம் பதிப்பு வெளிவந்துவிட்டது!! 60-நாளில் இங்கிலீஷ் கற்க அப்பியாசபாடங்களுடன் முன் பதிப்புகளைவிட அதிகப் பக்கங்களுடன் வெளிவந்துளது. இதுவரை 53100 புத்தகங்கள் செலவாயிருக்கின்றன. வேறு எதாலும் இவ்வளவு சீக்கிரத்தில் கற்க முடியாது. முன்பதிப்புகளை வைத்திருப்பவர்கூட 10-ம்பதிப்பைப் பார்த்தால் கட்டாயம் வாங்குவார். இதில் 1-அணு முதல் 3000-ரூபா வரையில் சம்பளம் வாடகை கணக்கும் சேர்த்துளது. 800-பக்கம். அழகிய சீமைகாலிகோ பைண்டு. விலை ரூ. 2.

எமது லேடி டிரேட்மார்க்கைப் பார்த்து வாங்குங்கள்.

தி. இராஜகோபால் முதலியார்,

3?2, தங்கசாலை வீதி, மதராஸ்.

கம்ப ராமாயணம்.

(மூலமும் உரையும்)

வை. மு. சடகோப ராமானுஜாசாரியார்,

கே. கிருஷ்ணமாசாரியார்,

வை. மு. கோபாலா கிருஷ்ணமாசாரியார் – பதிப்பு.

பாடபேதங்கள் குறிப்பிக்கப் பெற்றுப் பிழையற்ற மூலமும், தெளிவான பதவுரையும், சொல், அணி, யாப்பு முதலிய இலக்கணக் குறிப்புகளும், விசேட விளக்கங்களும் அடங்கி யிருக்கின்றன. உயர்ந்த காகிதம், நல்ல அச்சு, அழகிய கட்டடம்.

பால காண்டம்	...	ரூ	5.
அயோத்தியா காண்டம்		ரூ.	5.
ஆரண்ய காண்டம்	...	ரூ.	4.
கிஷ்கிந்தா காண்டம்	...	ரூ.	4-8.
சுந்தர காண்டம்	...	ரூ.	5.

(வி பி. செலவு வேறு)

மானேஜர்:—கலா நிலயம்,

11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.

நளாயனி வெண்பா.

திருப்பத்தூர் வர்த்தகரும் முனிசிபல் சேர்மனுமாய

கா. அ. சண்முக முதலியார் அவர்கள் இயற்றியது.

கற்பின்வைப்பெனும் நற்புகழ்வாய்ந்த நளாயினியின் திவ்விய சரித்திரத்தை நேரிசை வெண்பாக்களால் பாடப்பெற்றுள நூல். ஒவ்வொரு செய்யுட்கும் குறிப்புரை முதலியன அவ்வப் பக்கங்களிலேயே அடங்கியிருக்கின்றன. ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள், பிரம்மஸ்ரீ ரா. இராகவையங்கார், பிரம்மஸ்ரீ மு. இராகவையங்கார். போன்ற பெரியோர்பலரால் நன்கு பாராட்டப்பெற்றது. அழகிய காகிதத்தில் உயர்தரக் கட்டிடத்தில் அமைந்தது. விலை. ரூ. 1-0-0. (வி. பி. செலவு வேறு).

மானேஜர்:—"கலா நிலயம்",

11, வேளாளர் தெரு,

புரசைபாக்கம், சென்னை.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)